விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
கிளை நூல
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 25 வியாழக்கிழமை (10.08.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 234

## 'ஆவா' குழு; தீவிர விசாரணை

(கொழும்பு)

வடக்கில் செயற்படும் ஆவா குழுவினருக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் உள்ளதா என்பதைக் கண்டறியும் விசாரணைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு அவர் தெரிவிக்கையில், உள்நாடு மற்றும் 23

## "ஒற்றுமையுடன் இருங்கள்"

### தமிழரசுக் கட்சியினருக்கு சம்பந்தன் அறிவுரை



(கொழும்பு)

நாட்டின் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் அது தொடர்பான தீர்வுத்திட்ட முன் வரைபு வெளியாகுவதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை தொடர்பாக தமிழரசுக் கட்சி உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறிய த.தே.கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், தீர்வுத் திட்டம் வெளிவரும் வரையில் கட்சி உறுப்பினர்களால் கட்சிக்குள் குழப்பம் ஏற்படுவது பாதிப்புக்களை ஏற்படுத்தும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சி வட மாகாண சபை உறுப்பி 23

# ஐ.தே.கவை அழிக்க சதி!

## ஜனாதிபதியின் நடவடிக்கைகளுக்கு எதிராக போராட்டம் - ஹரின்



(கொழும்பு) ஐக்கிய தேசியக் கட்சியை அழிப்பதற்கு சதி வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக கூறியுள்ள அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜனாதிபதி ஆணைக்குழுவினூடாக ஐ.தே.கவினருக்கு எதிரான நடவடிக்கைகளை கண்டித்து தாம் பலமான போராட்டத்தை ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (23-ம் பக்.)

## மின்னல் தாக்கி இளம் தாய் பலி

(யாழ்ப்பாணம்)

மன்னார் மாவட்டம் மடு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடு தேவாலயப் பகுதியில் நேற்று புதன் கிழமை மாலை ஏற்பட்ட 24

## மங்கள இன்று யாழ். விஜயம்

(கொழும்பு)

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பல்வேறு விடயங்கள் காரணமாக யாழ் விஜயம் செய் 24

## சுமந்திரனை கொல்ல சதி; மறியல் நீடிப்பு

(கொழும்பு)

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. 24

## ஜனாதிபதி - பிரதமர் ரவி தொடர்பில் முடிவெடுப்பர்!

(கொழும்பு)

மத்திய வங்கி பிணை முறி விற்பனை மோசடி விவகாரத்தில் குற்றச்சாட்டுக்களுக்கு 23

## ரவிக்கு எதிரான பிரேரணை குறித்து இன்று முடிவு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக கையளிக்கப்பட்டுள்ள நம் 23

## பொலிஸ் மீது வாள்வெட்டு

### சந்தேகத்தின் பேரில் மேலும் 5 இளைஞர்கள் நேற்று கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். கொக்குவில் நந்தாவில் பகுதியில் பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 5 இளை ஞர்கள் குற்றத்தடுப்பு பிரிவு மற்றும் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி 10க்கும் மேற்பட்ட இளைஞர்கள் குழுவினரால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இரு பொலிஸார் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை விசா 24

## பல மோசடி இரகசியங்கள் மிக விரைவில் அம்பலமாகும்

### ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய வெளிவிவகார அமைச்சரும், முன்னாள் நிதிய மைச்சருமான ரவி கருணாநாயக்க தொடர்பான நெருக்கடிக்கு நாட்டின் நன்மை கருதி மிக விரைவில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என நல்லாட்சி அரசின் பிரதான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தெரிவிக்கின்றது.

மத்திய வங்கியின் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின் விசாரணைகளில் நல்லாட்சி மட்டுமல்ல. ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் இடம்பெற்ற மோசடி தொடர்பான தகவல்களும் அம்பலமாக ஆரம்பித்திருப்பதாகவும் அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவைக் கூட்டம் 24

## கணவனுக்காக கஞ்சா வளர்த்த மனைவி கைது

(கஹட்ட)

கணவனுக்காக கஞ்சா செடி வளர்த்து அதனை பராமரித்து வந்த மனைவியை கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கோன்வெவ வீதியில் வசித்து வரும் விவ 24

## ஜனநாயகத்தை மீறும் நல்லாட்சி அரசாங்கம்

### கண்டித்து மகிந்த அறிக்கை



(கொழும்பு)

தேர்தலை நடத்தாது மாகாண சபைகளின் பதவிக்காலத்தை நீடிப்பது மக்களின் சுயாதிபத்தியம் மற்றும் வாக்குரிமையை மீறும் செயல் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி 23

## வடக்கு ஆளுநர், முதலமைச்சரிடம்

### வேலையற்ற பட்டதாரிகளால் நேற்று மகஜர்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் நேற்று காலை 09.30 மணியளவில் யாழிலுள்ள வடமாகாண ஆளுநர் செயலகம் முன்பாக ஒன்றுகூடியுள்ளனர்.

முன்னதாக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடத்தினை நிரப்புவதற்காக அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 35 வயது வயதெல்லையை 45 ஆக அதிகரிக்கக் கோரி நேற்று பிற்பகல் வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரேயைச் சந்தித்துக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் எம்.பிகள் குழு சம்பந்தனுடன் சந்திப்பு



(கொழும்பு)

பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா. சம்பந்தனை சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

நேற்றைய தினம் குறித்த சந்திப்பு எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்த சந்திப்பின் போது, காணாமல் ஆக்கப்பட்டோர் குறித்தும், விடுவிக்கப்படாத மக்களின் காணிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வரட்சி காரணமாக விவசாயிகள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி அலுவலக தகவல்கள் குறிப்பிட்டிருந்தன. (செ-11)

### தமிழக மீனவர் கைது

# கடற்படையின் செயலுக்கு தமிழகத்தில் கடும் எதிர்ப்பு

(புதுக்கோட்டை)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை கண்டித்து, புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் நேற்று கடலுக்குச் செல்லாமல் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழக மீனவர்களை எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையினர் கைது செய்திருந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்தில் இருந்து கடந்த 7ஆம் திகதி கடலுக்குச் சென்ற 19 மீனவர்கள், ஜெகதாப்பட்டினத்தில் இருந்து சென்ற 22 மீனவர்கள், இராமநாதபுரம் மண்டபம் பகுதியில் இருந்து சென்ற 8 மீனவர்கள் என 49 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சிறைபிடிக்கப்பட்ட 12 படகுகளுடன் அனைத்து மீனவர்களும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு விசாரணைக்காகக் கொண்டு செல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், நேற்று புதுக்கோட்டை மாவட்ட மீனவர்கள் இலங்கை கடற்படையினரின் கைதை கண்டித்து பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இந்த பணிப்புறக்கணிப்பில் மீனவர்கள் மற்றும் மீன் விற்பனையாளர்கள் என சுமார் 5 ஆயிரம் பேர் ஈடுபட்டிருந்தனர்.

இந்த பணிப்புறக்கணிப்பால் புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று மீன் பிடித்தல் மற்றும் அது சார்ந்த வேலைகள் கடுமையாகப் பாதிப்படைந்திருந்தன. (செ-11)

**காணிகள், வீடுகள், தேவை**

யாழ்.நகர், நல்லூர், திருநெல்வேலி போன்ற பிரதேசங்களில் காணிகள், வீடுகள் தேவை.

**0764481101**

### நாளை மற்றும் நாளை மறுதினம்

# உலக சைவ இளைஞர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

2017 உலக சைவ இளைஞர் மாநாடு நாளை வெள்ளி மற்றும் நாளை மறுதினம் சனிக்கிழமை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம் பெற்றுள்ளது.

சைவத் தமிழ் மறு மலர்ச்சியில் இளைஞர்களின் பங்கும் பணியும் எனும் தொனிப்பொருளில் இம்மாநாடு நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

நாளை காலை 7 மணிக்கு நல்லூர் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமாகும் சைவத் தமிழ் எழுச்சிப் பேரணி கைலாய வாத்தியங்களான பறை, தப்பு, உடுக்கை, சங்கு போன்ற பழந்தமிழர் இசைக்கருவிகளையும் இசைத்து வந்து யாழ். நகரமைய வீதிகளுடாக மாநாட்டு மண்டபத்தை வந்தடையவுள்ளது. (செ)

"யாவரையும் காக்கும் கூட்டுறவு"

**கூட்டுறவு ஆர்வலர்களே!**

நமது முன்னோர்களின் தன்னலமற்ற பணிகளால் கட்டியெழுப்பப்பட்டு, நாம் பேசும் பாரம்பரியங்களோடு ஒன்றிணைந்து கூட்டுறவுக் கலாசாரம் ஒன்றையே தோற்றுவித்து, சமூக பொருளாதார கலாசார மேம்பாடு என்ற நோக்கில் பயணித்து கிராமிய மக்களுக்கு வாழ்வளித்து வந்த கூட்டுறவு அமைப்பு தற்போது பல சவால்களை எதிர்நோக்கி நிற்கின்றது.

இத்துறையின் ஆர்வலர்களை இணைத்து மாநாடு ஒன்றை விரைவில் நடத்த நடவடிக்கை எடுத்துள்ளோம். உலக மாற்றங்களுக்கும் தற்போதைய அரசின் பொருளாதார கொள்கைகளுக்கும் ஏற்ற வகையில் மக்கள் இயக்கமான கூட்டுறவு சவால்களுக்கு முகம் கொடுத்து வெற்றிப்பாதையில் பயணிப்பதற்கு ஏற்ற ஆலோசனைகளை கூட்டுறவாளர்கள், சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகியோரிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

தங்களது ஆலோசனைகளை 30.08.2017க்கு முன்னதாக "தலைவர் யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை வீரசிங்கம் கட்டட தொகுதி 2ஆம் மாடி யாழ்ப்பாணம்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தலைவர்**
**யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை**
**தொலைபேசி:-021 222 2324**

(சீ-9293)

### சுற்றி வளைப்பு; கைதுகள்

# மனித உரிமை ஆணைக்குழுவில் உறவுகள் நேற்று முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-துன்னாலை பகுதியில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டவர்கள் சிலரின் உறவினர்கள், யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்ட தமது உறவினர்கள், துன்னாலை பகுதியில் இடம்பெற்ற கலவரங்களிலும் மணல் கடத்தலிலும் ஈடுபட்டிருக்கவில்லை என தெரிவித்து மேற்படி முறைப்பாட்டை முன்வைத்துள்ளனர்.

பருத்தித்துறை-மணற்காடு, ஆறாம் கட்டை பகுதியில் மணல் ஏற்றிச்சென்ற ஹன்டர் வாகனம் மீது கடந்த 9ஆம் திகதி பொலிஸார் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

துன்னாலை-கரவெட்டி பகுதியைச் சேர்ந்த 25 வயதான இளைஞரொருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்தார்.

இதன்போது பொலிஸ் காவலரண் தாக்கப்பட்டதுடன், டயர்கள் எரிக்கப்பட்டு மக்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவங்களைக் கருத்திற்கொண்டு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த சுற்றிவளைப்பின் போது துன்னாலை பகுதியில் மாத்திரம் 24 பேர் கைது செய்யப்பட்டதுடன், வடமராட்சி முழுவதும் 42 பேர் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)

## 7 பேருக்கும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் அருகில் இரண்டு பொலிஸார் மீது இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டிருந்த நபர்களில் 7 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி வி.ரி.சிவலிங்கம் முன்னிலையில் குறித்த சந்தேக நபர்கள் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

இதன்போதே நீதவான் விளக்கமறியல் உத்தரவை பிறப்பித்ததோடு அன்றைய தினம் அடையாள அணிவகுப்பையும் நடத்துவதற்கு பணித்துள்ளார்.

சந்தேக நபர்களில் நான்கு பேர் கொழும்பில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கடந்த 7ஆம் திகதி கைது செய்யப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக அதே தினத்தில் 2 பேர் யாழ்ப்பாணத்தில் வைத்து பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் யாழ்.நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்கரனின் உத்தரவிற்கு அமைவாக யாழ்ப்பாணம் பொலிஸாரினால் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு 72 மணித்தியாலங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், நேற்று மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

**நன்றி நவிலல்**



**நேசன் கஜிதா** (வேணு)

**(தரம் 07 மாணவி அக்கராயன் மகா வித்தியாலயம்)**

கடந்த 2017.08.05 அன்றைய தினம் சுகவீனம் காரணமாக சாவடைந்த எமது செல்வப் புதல்வி நேசன் கஜிதா (வேணுக்குட்டி) அவர்களின் மரண நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் குறிப்பாக கிளி/மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிளி/அக்கராயன் மகா வித்தியாலய அதிபர், ஆசிரியர், மாணவர்கள் மற்றும் ஸ்கந்தபுரம்-2ஆம் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும்; கண்ணீர் அஞ்சலி உரை நிகழ்த்திய அதிபர்கள் ஏனையோருக்கும் சுகவீனமுற்றிருந்த போது சிகிச்சை அளித்த மருத்துவர்கள் மற்றும் பல வழிகளில் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் (வெளிநாட்டு உறவுகள்) எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிரந்தர முகவரி-4ம் கட்டை பூநகரி.
தற்காலிக முகவரி-No.59 கந்தபுரம்.


**குடும்பத்தினர்.**

(சீ-9296)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த நிலத்தில் குடியேற வேண்டும்

## இரணைதீவு மக்கள் கொழும்பில் பாரிய போராட்டம்





(கொழும்பு)

சொந்த இடத்தில் மீளக்குடியமர்த்துமாறு கோரி கிளிநொச்சி இரணைதீவு மக்கள் கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை முன்னெடுத்துள்ளனர். இரண்டு பேருந்துகளில் நேற்றுப் புதன்கிழமை காலை கொழும்பிற்கு சென்ற இரணைதீவு மக்கள் கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்ட இம் மக்களது சொந்த இடம், தற்போது கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதனால் தமது தொழிலை மேற்கொள்ள முடியாமல் அல்லறும் இம் மக்கள், நல்லாட்சி அரசாங்கம் இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டுமென கோரி கடந்த 100 நாட்களாக தொடர்ச்சியாக போராடி வருகின்றனர்.

இம் மக்களின் போராட் டம் நேற்று முன்தினம் 100 நாட்களை எட்டியிருந்த நிலையில், இதுவரை அரசாங்கம் தமது கோரிக்கைக்கு செவிசாய்க்கவில்லை என குற்றஞ் சாட்டி நேற்று தலைநகர் கொழும்பில் அணிதிரண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer), வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966.Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


## ரஷ்யாவிலிருந்து தாமதமாக வந்த நிவாரணங்கள்

இலங்கையில் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு 32 தொன் உதவிப் பொருட்களை விமானம்மூலம் ரஷ்யா அனுப்பி வைத்துள்ள தாக, ரஷ்யாவின் சிவில் பாது காப்பு, அவசர மற்றும் அனர் த்த உதவி அமைச்சின் செய் திக் குறிப்பில் கூறப்பட்டுள் ளது.

இலங்கையில் கடந்த மே மாதம் இறுதி வாரத்தில் பெரும் வெள்ள அனர்த்தம் ஏற் பட்டது. பாதிக்கப்பட்ட மக்க ளுக்கு உதவுமாறு இல ங்கை அரசாங்கம் அனைத் துலக சமூகத் திடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில், 32 தொன் உதவிப் பொருட்களை ஜஎல்-76 ரக சரக்கு விமானத்தில் ரஷ்யா அனுப்பி வைத்துள்ளது. மொஸ்கோவில் இருந்து இந்த விமானம் நேற்று முன்தினம் கொழும்புக்கு புறப்பட்டது.

நகர்த்தக்கூடிய மின்சார உற்பத்தி நிலையங்கள், கூடாரங்கள், கோப்பைகள் என்பன இந்த உதவிப் பொருட்களில் அடங்கியுள்ளன.

கடந்த மே மாதம் வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டவுடன் உடனடியாகவே பல நாடுகள் உதவிப் பொருட்களை அனுப்பியிருந்தன. எனினும் ரஷ்யா மிகத் தாமதமாக, இரண்டரை மாதம் கழித்தே, உதவிப் பொருட்களை அனுப்பி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உடுவில் பிரதேச செயலகம் சமுர்த்திப்பயனாளிகளால் முற்றுகை









சமுர்த்தி நிவாரண மீளாய்வின் போது ஏமாற்றப்பட்டதாக தெரிவித்து உடுவில் பிரதேச செயலகத்தினை முற்றுகையிட்டு சமுர்த்திப் பயனாளிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் அப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் நிலவியது.

குறித்த சமுர்த்தி மீளாய்வின் போது வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள மக்களுக்கு சமுர்த்தி முத்திரை வழங்கப்படவில்லை என்றும் இது தொடர்பில் மகஜர் கொடுத்த போதும் உரிய அதிகாரிகள் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் அத்துடன் சமுர்த்திப் பயனாளிகளை சமுர்த்தி உத்தியோக த்தர்கள் தரக்குறைவான வார்த்தைகளை பாவித்து பேசுகின்றனர் எனவும் குற்றம் சாட்டினர்.

அத்துடன் சமுர்த்தி நிவாரணங்களும் தமக்கு ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் இதற்கு சரியான தீர்வு வழங்கக் கோரி குறித்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டுள்தாக சமுர்த்திப் பயனாளிகள் தெரிவித்தனர்.

காலை 7 மணியளவில் பிரதேச செயலக வாயிலை மூடி சமுர்த்தி பயனாளிகள் போராட்டம் மேற்கொண்டதால் அவ்விடத்துக்கு வருகை தந்த உடுவில் பிரதேச செயலர் இது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கியதை அடுத்து போராட்டக்காரர்கள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்றனர்.

இதேவேளை தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக் குட்பட்ட சமுர்த்தி பயனாளிகளும் மேற்குறித்த விடயம் தொடர்பாக நீதி கோரி நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறி பிடத்தக்கது. (இ-9)


நீரிழிவுப் பாதிப்புக்களுக்கு ஆயுர்வேத மருத்துவம்

ஆரம்ப - நாட்பட்ட நீரிழிவுப் பாதிப்புக்கள் அதிகதாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், இளைப்பு, களைப்பு, நரம்புப் பாதிப்புக்கள் (Diabetic neuropathy), கை - கால் விறைப்பும் உணர்வற்ற நிலையும் (Numbness of hands and legs), சமிபாட்டுக் குழப்பம், மலச்சிக்கல், அதிக இரத்தக் கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய இரத்தக் குழாய் அடைப்பு (Coronary heart disease), இதய வலி (Chest pain / Angina) சிறுநீரகப் பாதிப்புக்கள் (Diabetic nephropathy), சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் (Renal infections), மற்றும் சிறுநீரில் அதிகளவு புரோட்டின், யூரியா அதிக அளவில் காணப்படுதல் போன்ற நீரிழிவுப் பாதிப்புக்களிற்கு ஆயுர்வேத முறைப்படி மருந்து, உணவு, வாழ்க்கை முறை போன்ற ஆலோசனைகளுடன் சிகிச்சை பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# நம்பிக்கையில்லாப் பிரேரணையின் போது பலரின் நேர்மையை அறிந்து கொள்ளலாம்

## கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்



(கொழும்பு)

அமைச்சர் ரவி கருணா நாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் போது சகலரது நேர்மையையும் அறிந்து கொள்ள முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் சில அமைச்சர்கள் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளிப்பதாக பகிரங்கமாக கத்தினாலும் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவதில் சட்ட ரீதியான பிரச்சினை இருப்பதாக சபை முதல்வர் கூறியுள்ளார்.

இது வெட்கப்பட வேண்டிய விடயம். சில சமிக்ஞைகளுக்கு அமைய வேலை செய்யும் நபர்களின் தேவைக்காக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுவதை தவிர்க்கப் பார்க்கின்றனர்.

மேலும், நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை கையளிக்கும் போது அதனை நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்க வேண்டியது சபாநாயகரின் பொறுப்பு. அதில் பிரச்சினைகள் இருக்குமாயின் அது குறித்து பின்னர் கவனம் செலுத்தலாம் என கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பர் கிண்ண கால்பந்து
# ரியல் மட்ரிட் மீண்டும் சம்பியன்






சுப்பர் கிண்ண கால்பந்து போட்டியில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் மன்செஸ்டர் யுனைடெட் அணியை வீழ்த்தி, சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

மாசிடோனியாவில், சுப்பர் கிண்ண கால்பந்து போட்டி நடந்தது. இதில் சம்பியன்ஸ் லீக், ஐரோப்பா லீக் தொடர்களின் நடப்பு சம்பியன்களான முறையே ரியல் மட்ரிட் (ஸ்பெயின்), மன்செஸ்டர் யுனைடெட் (இங்கிலாந்து) அணிகள் மோதின.

அபாரமாக ஆடிய 'நடப்பு சம்பியன்' ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென்றது.

ரியல் மட்ரிட் சார்பில் கேஸ்மிரோ (24வது நிமிடம்), இஸ்கோ (52வது நிமிடம்) தலா ஒரு கோல் அடித்து கைகொடுத்தனர். மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கு லுகாகு (62வது நிமிடம்) ஆறுதல் தந்தார்.

இதன்மூலம் ரியல் மட்ரிட் அணி, நான்காவது முறையாக (2002, 2014, 2016, 2017) சுப்பர் கிண்ணம் வென்றது. பார்சிலோனா (ஸ்பெயின், 1992, 1997, 2009, 2011, 2015), மிலன் (இத்தாலி, 1989, 1990, 1994, 2003, 2007) அணிகள் அதிகபட்சமாக தலா 5 முறை சுப்பர் கிண்ணம் வென்றுள்ளன.

# 3ஆவது டெஸ்டில் அக்ஷர் படேல்



இலங்கைக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டிக்கான இந்திய அணியில், தடை விதிக்கப்பட்டுள்ள ரவிந்திர ஜடேஜாவுக்கு பதிலாக சகலதுறை வீரர் அக்சர் படேல் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சென்றுள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது. முதலிரண்டு போட்டிகளில் வென்ற இந்தியா 2:0 என ஏற்கனவே தொடரை கைப்பற்றி முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் எதிர் வரும் 12ஆம் திகதி பல்லேகலேயில் ஆரம்பமாகிறது.

சமீபத்தில் கொழும்பில் நடந்த இரண்டாவது டெஸ்டில், இலங்கையின் புஷ்பகுமாரவை நோக்கி ஆபத்தான முறையில் பந்தை எறிந்ததாக குற்றம் சுமத்தப்பட்ட இந்திய சகலதுறை வீரர் ரவிந்திர ஜடேஜாவுக்கு, ஒரு டெஸ்டில் விளையாட தடை விதிக்கப்பட்டது. இதனையடுத்து இவருக்கு பதிலாக மாற்று வீரரை தேர்வு செய்ய இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) முடிவு செய்தது.

இதற்காக ஜெயந்த் யாதவ் அல்லது சகலதுறை வீரர் அக்சர் படேலை தேர்வு செய்ய, தேர்வுக்குழு தலைவர் எம்.எஸ்.கே. பிரசாத், பயிற்சியாளர் ரவி சாஸ்திரி, அணித் தலைவர் விராட் ஹோலி ஆகியோருடன் ஆலோசனை செய்தார். முடிவில் அக்சர் படேல் தேர்வு செய்யப்பட்டார்.

சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த முத்தரப்பு ஒருநாள் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற இந்தியா 'ஏ' அணியில் இடம்பெற்றிருந்த அக்சர் படேல், இதுவரை 30 ஒருநாள் (170 ஓட்., 35 விக்.,), 7 சர்வதேச இருபது-20 (62 ஓட்., 7 விக்.,) போட்டிகளில் விளையாடி உள்ளார். இவருக்கு, ஆடும் பதினொருவர் அணியில் வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில், டெஸ்ட் போட்டியில் அறிமுகமாகலாம்.

**இந்திய அணி:** விராத் ஹோலி (அணித்தலைவர்), ஷிகர் தவான், லோகேஷ் ராகுல், புஜாரா, அஜின்கியா ரகானே (துணைத் தலைவர்), ரோகித் சர்மா, அஷ்வின், அக்சர் படேல், விரிதிமன் சகா (விக்கெட் காப்பாளர்), இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், ஹர்த்திக் பாண்ட்யா, புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, குல்தீப் யாதவ், அபினவ் முகுந்த்.

# இலங்கை வீரர்கள் மனம்வருந்த கூடாது
## அரவிந்த டி சில்வா



சமூகவலைதளத்தில் கிண்டலுக்கு ஆளாகும் இலங்கை வீரர்கள் அதை புறக்கணிக்க வேண்டும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி, சிம்பாப்வே அணிக்கு எதிரான ஒருநாள் போட்டி தொடரை இழந்தது.

அடுத்து இந்திய அணிக்கான டெஸ்ட் தொடரையும் இழந்துள்ளது. இப்படி தொடர் தோல்விகளை சந்தித்து வரும் அந்த அணியின் வீரர்களை சமூகவலைதளத்தில் பலர் கிண்டல் செய்து வருகிறார்கள்.

இலங்கை வீரர்கள் மோசமாக செயற்படுவதாக பலர் கடுமையாக விமர்சித்தும் வருகிறார்கள்.

இந்நிலையில், அணியின் இளம் வீரர்கள் இந்த கிண்டல்களை கண்டு மனம் வருந்தக் கூடாது என அணியின் ஆலோசகர் அரவிந்த டி சில்வா கூறியுள்ளார்.

மூன்றாவது டெஸ்ட் போட்டி வரும் சனிக்கிழமை தொடங்கவுள்ள நிலையில் இதுபோன்ற விடயங்களை இலங்கை வீரர்கள் புறக்கணிக்க வேண்டும் எனவும் டி சில்வா அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை அணியின் துடுப்பாட்ட ஜாம்பவான்கள் ஜெயவர்த்தன மற்றும் சங்ககார கடந்த 2015ல் ஓய்வுபெற்றதிலிருந்தே அவர்களின் இடத்தை நிரப்ப முடியாமல் அந்த அணி திணறி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஹோலி ஓய்வு
# ஏனைய போட்டிகளுக்கு புதிய தலைவர்



இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 போட்டி தொடரில் ஹோலிக்கு ஓய்வு அளிக்கப்பட்டு புதிய அணித்தலைவர் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்திய கிரிக்கெட் சபை இரண்டே நாட்களில் கலந்தாய்வு செய்து இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 போட்டிக்கான அணி வீரர்களை தெரிவு செய்யவுள்ளது.

இந்நிலையில் இலங்கைக்கு எதிரான ஒருநாள் மற்றும் ரி20 போட்டிகளுக்கும் புதிய அணித்தலைவர் நியமிக்கப்படவுள்ள தகவல்கள் வெளியாகியுள்ளன, ரோஹித சர்மாவிற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக கூறப்படுகிறது.

எதிர்வரும் தொடர்களை கருத்தில் கொண்டு கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதல் அனைத்து இந்திய போட்டிகளிலும் ஓய்வில்லாமல் விளையாடி வரும் விராட் ஹோலிக்கு சிறிது ஓய்வுகொடுக்க இந்திய கிரிக்கெட் சபை முடிவெடுத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் மருத்துவக் கல்லூரிகளை ஆரம்பிக்க 5 வெளிநாடுகள் ஆர்வம்

## உயர் கல்வி அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு



இலங்கையில் தனியார் மருத்துவக் கல்லூரிகளை அமைக்க ஜப்பான், இந்தியா, பிரிட்டன் உட்பட ஐந்து வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் ஆர்வம் காட்டியிருப்பதாக உயர் கல்வி யமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒரேயொரு தனியார் மருத்துவக் கல்லூரியான மாலபே தனியார் மருத்துவக் கல்லூரி (சைட்டம்) பற்றிய உயர்நீதிமன்றத்தின் வழக்கு தீர்ப்புக்காக அவர்கள் காத்திருக்கின்றனர்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்குமானால் தங்களது கிளைகளை இங்கே ஆரம்பிக்க அவர்கள் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், இலங்கையில் மருத்துவக் கல்வியை மேலும் முன்னேற்ற இத்தகைய தனியார் மருத்துவக் கல்லூரிகள் அவசியம் எனவும் அமைச்சர் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (இ-7)

# 6 மாதங்களில் பர்பேசுவலுக்கு 816 மில்லியன் ரூபாய் இலாபம்

பேர்பெச்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம், இரண்டாம் நிலைச் சந்தையில் அதன் முதல் 6 மாதங்களில், 816 மில்லியன் ரூபாயை இலாபமாகப் பெற்றது என அந் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன தெரிவித்தார்.

மத்திய வங்கியின் திறைசேரிப் பிணைமுறி வழங்கல் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன் நேற்று முன்தினம் ஆஜரான அவர், தனது சாட்சியமளிப்பின் போது இத்தகவலை வெளியிட்டார்.

பிரதம வணிகராக, பேர்பெச்சுவல் நிறுவனத்தில் 2013ஆம் ஆண்டு இணைந்து கொண்ட தான், 2015 ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பதவியுயர்த்தப்பட்டார் என அவர் குறிப்பிட்டார். அவருடைய பதவியுயர்வு சர்ச்சைக்குரிய பிணைமுறி விற்பனை இடம்பெறுவதற்கு முன்னரே இடம்பெற்றிருந்தது.

இதன்போது தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், 2014ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் 30ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் பேர்பெச்சுவல் நிறுவனம் இரண்டாம் நிலைச் சந்தையில் பிணைமுறி பரிமாற்றம் மூலமாக 816 மில்லியன் ரூபாவை இலாபமாகப் பெற்றது எனத் தெரிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட ஆணையாளர்களில் ஒருவரான நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன, "அப்போதைய மத்திய வங்கி ஆளுநரான அஜித் நிவார்ட் கப்ராலின் சகோதரி ஷிரோமி விக்கிரமசிங்க உங்கள் நிறுவனத்தின் பணிப்பாளர்களுள் ஒருவராக 2014ஆம் ஆண்டு இருந்தாரா?" என்று கேள்வியெழுப்பினார்.

அதற்கு பலிசேன, "ஆம்" என்று பதிலளித்தார். அந்த நேரத்தில், இரண்டாம் நிலைச் சந்தையில் மாத்திரம், வணிக நடவடிக்கை களில் ஈடுபட்டுக் கொண்டிருந்ததாக அவர் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் விவகாரம் மங்களவின் மக்கள் தொடர்பாடல் அதிகாரி நேற்று இராஜினாமா?





நிதி மற்றும் ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவின் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரி சமீர மநகர தனது பதவியிலிருந்து இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

சமீர மநகர உள்ளிட்ட நால்வர் பயணித்த ஜீப் வாகனத்தில் போதைப்பொருள் கடத்தியதாக கடந்த 5 ஆம் திகதி விசேட பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டதனை அடுத்து குறித்த செயற்பாட்டை வைத்து நல்லாட்சியின் பெயருக்கு சிலர் களங்கம் விளைவிப்பதாக அவர் அமைச்சருக்கு வழங்கியுள்ள இராஜினாமா கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வைத்திருந்த நபரை தவிர ஏனைய மூன்று நபர்களும் குறித்த சம்பவத்தில் தொடர்புள்ளதாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் பிரதான சந்தேக நபர் பயணித்த வாகனத்தில் அவர்கள் பயணித்ததை குறிப்பிட்டே குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டதாக கல்கிஸை நீதிமன்றத்தில் பொலிஸார் தெரிவித்ததாகவும் குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த விசாரணைகள் முடிந்து தான் நிரபராதியாக அறிவிக்கப்படும் வரை அமைச்சின் பதவிகளிலிருந்து இராஜினாமா செய்வதாக சமீர மநகர தெரிவித்துள்ளார்.

இராஜினாமா கடிதத்துடன் அமைச்சின் வாகனங்கள் மற்றும் காரியாலய பொருட்கள் அனைத்தும் கையளிக்கப்பட்டுள்ளதாக குறித்த கடிதத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)


## TECHINCIAN/டிஷ் ஆண்டெனா பொருத்துநர்கள் உதவியாளர்கள் தேவை/STORE KEEPER

கொழும்பில் இயங்கி வரும் எமது டிஷ் ஆண்டெனா மற்றும் கேபிள் டிவி உபகரணங்கள் விற்பனை நிலையத்திற்கு கொழும்பில் தங்கி இருந்து வேலை செய்யக்கூடிய STORE KEEPER /TECH NICIAN மற்றும் டிஷ் ஆண்டெனா மற்றும் இலத்திரனியல் பொருட்கள் விற்பனையாளர்கள்' மற்றும் ரிப்பேர்/டிஷ் ஆண்டெனா பொருத்துநர்கள் மற்றும் உதவியாளர்கள் உடன் தேவை. தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப் பனவுகள் கிடைக்கும். உணவு, தங்குமிடம் இலவசம்.

உடன் தொடர்பு கொள்ளவும்

Contact:
077 771 0785
SATS-TECH ENGINEERS(PVT) LID
No.51/102 Woulfendhal street,
Colombo 13.

(சி/9276)

## SATS-TECH ENGINEERS

மாதாந்தம் வெறும் நூற்று ஐம்பது மட்டும் செலுத்தி உங்கள் அபிமான தமிழ் சானல்களை கண்டுகளிக்க முடியும்.




No.298, K.K.S. Road, Jaffna

(C-9276)

:021 222 8812, 071 098 6224


# மரண அறிவித்தல்

## அமரர். கந்தையா பஞ்சாட்சரம்



காரைநகர் முல்லைப்பிலவை பிறப்பிடமாகவும் இலந்தைச்சாலையை வசிப்பிடமாகவும் கொண்ட பிரபல சோதிடர் கந்தையா பஞ்சாட்சரம் அவர்கள் 08.08.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சின்னக்குட்டி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லையா சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரி அம்மாள் அவர்களின் அன்புக் கணவரும் அன்னலட்சுமி, அமரர் நாகேஸ்வரராசா, மகேந்திரராசா, அருந்தவராசா, சிவானந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், சற்குணராசா, நளினி, சிவகௌரி, சிவசோபனா ஆகியோரின் அன்பு மாமனாரும் விதுரஷ், நிரேஷ், நிஷா, அருண், தரன், தீரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 11.08.2017 அன்று காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இலந்தைச்சாலை,
காரைநகர்.

(077)

தகவல்:
குடும்பத்தினர்.

# இராசி பலன்

10.08.2017
(ஆடி 25, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
திருதியை பின்னிரவு 12.26மணிவரை
சதயம் காலை 6.38 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04மணிவரை
வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | செவ் |
| சந் | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம் இரவு 12.42 மணிக்கு மீன-சந் | | சூரி ராகு,புத சுக், செவ் |
| கேது | | | |
| | சனி | | குரு |

**மீனம்:** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப் படலாம், தொழிலில் சில மாற்றம் செய்ய முற்படுவீர்கள்

**மேடம்:** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், எதிர்காலம் இனிமையாக அமைய புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** கூட்டுத் தொழிலில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும் இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**மிதுனம்:** உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாக பார்ப்பர், புதிய முயற்சிகள் கைகூடும், பகையொன்று நட்பாகலாம்.

**கும்பம்:** ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சிந்தனை மிகுதியான நாள்.

**கடகம்:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், உதவுவதாகச் சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், பொருளாதார நிலை உயர்வடையும் நாள், தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும்.

**சிம்மம்:** சொந்த பந்தங்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** பொருளாதார நிலை உயர்வடையும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புக்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**விருச்சிகம்:** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், நண்பர்கள் மூலம் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** எண்ணங்கள் எளிதல் ஈடேறும் நாள், வியாபார விருத்தியுண்டு, சுபகாரியச் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** பகைவர்கள் விலகுவர், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், உடல் நலனில் முன்னேற்றமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சிறையில் கொல்லப்பட்ட தமிழ் அரசியல் கைதி டில்ருக்ஷனின் நினைவு நாளை முன்னிட்டு சகல அரசியல் கைதிகளின் விடுதலையைக் கோரி கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் பிரதான பேருந்து நிலையம் முன்பாக பிற்பகல் 3.30 மணியளவில் ஆரம்பமாகிய இந்தப் போராட்டம் பின்னர் ஊர்வலமாக வைத்தியசாலை வீதியூடாகச் சென்று பின்னர் ஆரம்பித்த இடத்தில் முடிவடைந்தது. (படங்கள்:-சாளின், பொ.சோபிகா)

# கழிவகற்றல் செயற்பாடு உரியமுறையில் இல்லை

## மானிப்பாய் மக்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் மாநகர சபையினரின் கழிவகற்றல் செயற்பாடு உரிய முறையில் இடம்பெறாததால் வீதிகளில் கழிவுகள் தேங்கிக் கிடப்பதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-102)




# மேசன் பயிற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

"சில்ப சவிய" திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மேசன் பயிற்சியாளர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியளவில் யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டபத்தில் வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுற்றது.

இந்த நிகழ்வில் 2016 ஆம் மற்றும் 2017ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் மேற்குறித்த பயிற்சி பெற்ற அனைத்து பயிற்சியாளர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021222 2039 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (இ-9)

# மணல் அகழ்வில் ஈடுபட்ட 9 பேரின் மறியலும் நீடிப்பு

வடமராட்சி கற்கோவளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒன்பது சந்தேக நபர்களையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் நளினி சுந்தசாமி உத்தரவிட்டார்.

கடந்த 07.08.2017 திங்கட்கிழமை உழவு இயந்திரம் ஒன்றில் மணல் அகழ்ப்படுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய உழவு இயந்திரத்தை கைப்பற்றியதுடன் மணல் ஏற்றிக் கொண்டிருந்ததாக தெரிவிக்கப்படும் ஒன்பது சந்தேக நபர்களையும் கைது செய்து மறுநாள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-60)




வல்வெட்டித்துறை முத்துமாரி மணி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கணித விழாவில் 460 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.சி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு மாணவன் ஒருவனுக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# குப்பை கூழங்களை அகற்றக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையால் செல்லும் வீதியில் குப்பை கூழங்களை கொட்டுவதால் அவ்வீதியால் பயணிக்க முடியாதுள்ளதாக மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நீண்ட நாட்களாக இக் குப்பைகள் காணப்படுவதால் துர்நாற்றம் வீசுவதாகவும் இதனால் நோய்த் தொற்று ஏற்படுவதாகவும் அப் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே வலி. கிழக்கு பிரதேச சபையினர் இதனைக் கருத்திற் கொண்டு இக் குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் அப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-78)

# யாழ். புத்தகத் திருவிழா

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டும் இந்தியாவின் சுதந்திர தினத்தின் 70 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டும் யாழ்.இந்தியத் துணைத் தூதரகம் யாழ். மாநகர சபையினருடன் இணைந்து வழங்கும் யாழ். புத்தகத் திருவிழா நாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். மாநகர சபை சுகாதாரப் பணிமனையில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

இப் புத்தகத் திருவிழா 12.08.2017 முதல் 21.08.2017 வரை முற்பகல் 10 மணியிலிருந்து இரவு 10 மணி வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# குடும்பஸ்தர் மீது வாள்வெட்டு!

வடமராட்சி அல்வாய் வடக்குப் பகுதியில் வாள் வெட்டிற்கு இலக்கான குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை 2 மணியளவில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். முத்துமாரி அம்மன் கோவிலடி அல்வாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி கமலராஜ் (வயது-53) என்ற குடும்பஸ்தரே வாள் வெட்டிற்கு இலக்கானவராவார்.

அப் பகுதியில் சுற்றித் திரியும் ரவுடிக் கும்பல் ஒன்றே இவர் மீது வாள் வெட்டினை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)

# கந்தபுராண எழுச்சி விழாவின் 14 ஆம் நாள் நிகழ்வு இன்று

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தைமுன்னிட்டு கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் நிகழ்வுகள் அரங்கேறும் கந்த புராண எழுச்சி விழாவின் 14 ஆம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

நல்லை திருஞான சம்பந்த ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராச்சார்ய சுவாமிகள், ஈவினைப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ தியாக கெங்காதரக் குருக்கள் முன்னிலையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட இசைத்துறை பதில் தலைவர் திருமதி கிருபா சக்தி கருணா கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் கந்த புராணம் தொடர்பான ஆன்மீகச் சொற்பொழிவினை சைவப் புலவர் ஏ.அனுசாந்தன் நிகழ்த்துவதுடன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண் கலைப்பீட இசைத்துறைமாணவர்களின் கலை நிகழ்வுகள் என்பன இடம்பெறும்.(இ-3)

# சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறார்களிடையே 'பட்டம் தயாரித்தல்' தொடர்பான போட்டி

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக பன்னிரண்டு மாத விளக்கு தொடர்பான ஆவணி மாத வேலைத்திட்டத்தில் தற்போது எமது விடுமுறைக்காலம் என்ற தொனிப்பொருளின் கீழ் குடும்ப சூழலில் கலாசாரம் மற்றும் கலையை ரசிப்பதன் மூலம் மனிதனின் உள்ளக தொடர்புகளை மேம் படுத்துவதற்கும் மற்றும் குழந்தைகளின் சுதந்திரம், குடும்ப உள்ளக தொடர்புகள், பெற்றோர்களின் இணைப்பு மற்றும் சுதந்திரத்தின் அர்த்தம் பற்றிய வேலைத்திட்டமாக அமைகிறது.

இது தொடர்பாக நல்லூர் பிரதேச கலாசார அதிகார சபையினால் சிறுவர் கழகங்களைச் சேர்ந்த சிறார்களிடையே பட்டம் தயாரித்தல் தொடர்பான போட்டி நடத்தப் படவுள்ளது.

இதில் நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சிறுவர் கழக சிறார்கள் மட்டும் பங்கு கொள்ள முடியும்.

இப்போட்டியானது கீழ்ப் பிரிவு (வயது 05-10 வறை), மேற்பிரிவு பிரிவு (வயது-11-15 வறை) பிரிவுகளாக நடைபெறும். இப்போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் தங்கள் பெயர் விபரங்களை நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் எதிர்வரும் 20.08.2017ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் எ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார். (இ)

# தரம் -5 மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் றோட்டறக் கழகம் மற்றும் சமுதாய எழுச்சி மன்றம் இணைந்து நடத்தும் தரம்-5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான புகழ் வெளியீட்டு ஆசிரியர் லோ. விஜேந்திரனின் நெறிப்படுத்தலில் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரை ஆறுகால் மட பாரதி சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும்.

இக் கருத்தரங்கில் பங்கு பற்றும் அனைத்து மாணவர்களுக்கும் இலவச மாதிரி வினாத்தாள்கள் வழங்கப்படும். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படையின் செயல் காட்டுமிராண்டித்தனமானது

## எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் கண்டனம்

(சென்னை)

தமிழக மீனவர்களைத் தாக்கிக் கைது செய்து, அவர்களது படகுகளை மோதி மூழ்கடித்திருக்கும் இலங்கைக் கடற்படையின் செயல் காட்டுமிராண்டித்தனமானது என்று தி.மு.க. செயல் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஒரே நாளில் புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 41 மீனவர்கள், இராமேஸ்வரம் மண்டபம் பகுதியைச் சேர்ந்த 8 மீனவர்கள் என்று மொத்தம் 49 மீனவர்களைக் கைது செய்துள்ள இலங்கைக் கடற்படையின் அராஜக நடவடிக்கைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

அராஜகமாக கைது செய்தது மட்டுமன்றி தமிழக மீனவர்களின் இரு படகுகளை தங்களின் கப்பலை விட்டு மோதி கடலில் மூழ்கடித்திருப்பதும் மற்ற படகுகளை பறிமுதல் செய்திருப்பதும் இலங்கைக் கடற்படையின் காட்டுமிராண்டித்தனமான செயலாக அமைந்திருக்கிறது.

தங்களின் வயிற்றுப் பிழைப்புக்காகவும் வறுமையில் வாடும் தங்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்றவும் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை, இப்படி அரக்கத்தனமாக தாக்கிக் கைது செய்வதும் அவர்களின் படகுகளை உடைத்து நொறுக்கி நாசப்படுத்துவதும் 'நட்பு நாடு' என்று கூறும் இலங்கை அரசுக்கு அழகல்ல.

ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கான திட்டத்தை பிரதமர் நரேந்திரமோடி , இராமேஸ்வரத்தில் தொடக்கி வைத்த



ஈரம் காய்வதற்குள் இலங்கைக் கடற்படை இப்படியொரு மாபாதகத் தாக்குதலை நம் நாட்டு மீனவர்கள் மீது நடத்தி, 49 மீனவர்களைக் கைது செய்திருப்பது மிகமிக மோசமான, மனித உரிமை களை மீறிய, அந்த மீனவக் குடும்பங்களை நிலை குலைய வைக்கும் இதயமற்ற நடவடிக்கையாகும். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய அரசு தொடங்கியுள்ள ஆழ்கடல் மீன்பிடிப்புத் திட்டத்திற்கும் ஊறுவிளைவிக்கும் செயலாகவே இலங்கைக் கடற்படையின் இந்த கண்மூடித்தனமான கைதுகள் அமைந்துள்ளன.

இலங்கைச் சிறையில் வாடும் இந்திய மீனவர்களை ஒவ்வொரு முறை விடுவிக்கும் போதும், அடுத்து வரும் சில நாட்களில் கொத்துக் கொத்தாக மீனவர்களைக் கைது செய்யும் இலங்கை அரசின் மோசமான நடவடிக்கை ஒரு தொடர் கதை போல் நீண்டு கொண்டிருக்கிறது.

மீனவர் பிரச்சினைக்கு சுமுகத்தீர்வு காண மீனவர்கள் பிரதிநிதிகளுடன் இரு நாட்டு அரசுகளின் சார்பில், பல்வேறு மட்டங்களில், பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடந்துள்ளன.

அந்தப் பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசு இந்திய அரசுக்கு அளித்த எந்த உறுதிமொழியையும் காப்பாற்றவில்லை என்பது ஒரு புறமிருக்க, இன்னொரு புறம் பேச்சுவார்த்தையைச் சீர்குலைக்கும் விதத்தில் இந்திய மீனவர்களைக் கைது செய்வதும், படகுகளை பறிமுதல் செய்வதும் வேதனையளிக்கிறது.

கண்மூடித்தனமாக நடந்துள்ள இந்த மீனவர் கைது நடவடிக்கை, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள மீனவர்களைக் கொந்தளிக்க வைத்து, அவர்கள் தீவிரப் போராட்டத்தில் குதித்துள்ளார்கள். ஆகவே, 7.8.2017 அன்று கைது செய்யப்பட்ட புதுக்கோட்டை மற்றும் இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 49 மீனவர்களையும் சேர்த்து இலங்கைச் சிறையில் வாடிக் கொண்டிருக்கும் 64 மீனவர்களையும், 125 படகுகளையும் உடனடியாக விடுவிக்க, மத்திய அரசு தூதரக ரீதியிலாக உரிய அழுத்தத்தை, இலங்கை அரசுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீனவர்களின் படகுகளை முட்டி மோதி நாசப்படுத்துவது, பறிமுதல் செய்வது போன்ற நடவடிக்கைகளை இலங்கை அரசு கைவிட வேண்டும் என்று இந்திய அரசு, அந்நாட்டு பிரதமரிடமோ அல்லது வெளியுறவுத்துறை அமைச்சரிடமோ கண்டிப்புடன் சொல்ல வேண்டும் என்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என அந்த அறிக்கையில் ஸ்டாலின் மேலும் வலியுறுத்தியுள்ளார். (இ)



புலோலி உபய கதிர்காமம் பெரிய தேவனத்தாய் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பொன். சுகந்தன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களையும் வழங்கினார்.

## இளஞ்செழியனுக்கு ஜனாதிபதி கடிதம்

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜனாதிபதி அனுப்பிவைத்த குறித்த கடிதம் நேற்று முன்தினம் காலை நீதிபதிக்கு கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 22ஆம் திகதி நல்லூர் பகுதியில் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பிலும், இதில் படுகாயமடைந்த இரு மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றைய நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை தொடர்பிலும் ஜனாதிபதிக்கு நீதிபதி இளஞ்செழியன் அண்மையில் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ கையெழுத்திட்டு பதில் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அன்றைய தினம் இடம்பெற்ற துன்பகரமான சம்பவத்தின் போது நீதிபதியாகிய நீங்கள் நடந்து கொண்ட விதம் தொடர்பாக ஜனாதிபதி பாராட்டுக்களை தெரிவித்துள்ளார் என அந்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## அச்சுறுத்திய கோப்ரலுக்குச் சிறை

(கொழும்பு)

கிரிந்திவெல- ரதவான பகுதியில், தாய், தந்தை மற்றும் மகள் ஆகியோரை அச்சுறுத்தி, தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில், ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த கோப்ரலுக்கு பூகொட நீதவான் நீதிமன்ற நீதவானும் மாவட்ட நீதவானுமான நிலுபுலீ லங்காபுர, 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கால சிறைத் தண்டனையையும் 1,000 ரூபாய் அபராதமும் நேற்று விதித்துள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்டோருக்கு 20,000 ரூபாய் நட்டஈடு செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த மூவர் உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக, இச்சம்பவம் தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, 4 பேர் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு, பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)



ஜே/352 உடுப்பிட்டி கிராம சேவையாளர் பிரிவில் கிராமிய செயலகம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இக்கிராமிய செயலகம் 10 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் அமைக்கப்படவுள்ளது. இவ் அடிக்கல் நாட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டிப் பிரதேச செயலர் சிறிமோகனன் கலந்து கொண்டார். (இ-60)

## ஹன்டர்- மோ.சைக்கிள் விபத்து



வேகக்கட்டுப்பாட்டையிழந்த சிறிய ரக ஹன்டர் வாகனம் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கோப்பாய் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்றுப் புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் மானிப்பாய் வீதியும் கோப்பாய் இராசவீதிச் சந்திக்கும் இடையில் கிருஷ்ணர் கோவிலுக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்திலேயே குறித்த நபர் படுகாயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாதங்களையும் கடந்து தொடரும் நிலமீட்பு போர்




கிளிநொச்சி பூநகரி பிரதேச இரணைதீவு மக்களின் சொந்த நிலத்திற்குச் செல்வதற்கான போராட்டம் நேற்று முன்தினம் . நூறாவது நாளை எட்டியுள்ளது.

அமைச்சர்கள், மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர், அதிகாரிகள் என அனைவரினதும் வாக்குறுதிகள், காலக்கேடுகள் கடற்காற்றோடு பறந்துவிட இரணைதீவு மக்களின் போராட்டம் நூறாவது நாளை எட்டியுள்ளது.

தங்களது பூர்வீக இடத்தில் மீள்குடியேற வேண்டும் என வலியுறுத்தி தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்து நேற்று முன்தினம் நூறாவது நாளாகும். இதனை முன்னிட்டு இரணைமாதாநகரில் அமைந்துள்ள தேவாலயத்தில் விசேட பூசை வழிபாடுகளையும் மேற்கொண்ட மக்கள் இதுவரை காலமும் கடற்கரையில் இடம்பெற்று வந்த போராட்டம் இனி அருகில் உள்ள தேவாலயத்தில் இடம்பெறும். வரும் மழைக்காலம் என்பதனால் போராட்ட இடத்தை மாற்றியிருக்கின்றோம் எனத் தெரிவித்துள்ளனர்.

மேலும் நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்து நூறு நாட்களுக்குள் பல அரசியல்வாதிகள் வந்து சென்றுள்ளனர் .இதன் போது அவர்கள் அளித்த எந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

எமது பிரதேசத்தைச் சேர்ந்த பெண் அமைச்சர் எமது மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் எனப் பலர் வந்தனர் .ஆனால் இவர்கள் தந்த எல்லா உறுதிமொழிகளும் காலக்கெடுகளும் இக்கடற்கரை காற்றோடு சென்றுவிட்டது எனக் கவலை தெரிவித்த மக்கள் இனி எங்களது போராட்டத்தை வேறு வடிவத்தில் மேற்கொள்ளவும் தீர்மானித்திருப்பதாக தெரிவித்தனர். (8)




# சத்திரசிகிச்சை பயிற்சிக்கான தேர்வில் தெரிவான மன்னார் வைத்திய அதிகாரி

கொழும்பு பல்கலைக்கழகத்தின் வைத்திய துறைக்கான பட்டப்படிப்பின் படிப்பு நிறுவகம் நடத்திய சத்திரச்சிகிச்சை முதுமாணி பட்டப்படிப்பின் படிப்பை பயில்வதற்கான அனுமதி தேர்வில் தெரிவு செய்யப்பட்ட 27 வைத்திய அதிகாரிகளில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த வைத்திய அதிகாரி செபஸ்தியான் பிள்ளை தர்சனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். குறித்த தெரிவுப் பரீட்சையின் முடிவுகள் கடந்த வாரம் வெளியாகியது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் மற்றும் பட்டப்படிப்பு நிறுவன பணிப்பாளர் ஆகியோர் ஒப்பமிட்டு குறித்த பெறுபேற்றை வெளியிட்டுள்ளனர்.

இவர்களில் 19 சிங்களவர்களும்,7 தமிழர்களும், ஒரு முஸ்லிம் வைத்தியரும் அடங்குகின்றனர்.

மேலும், தெரிவு செய்யப்பட்ட 27 வைத்தியர்களில் மன்னாரைச் சேர்ந்த வைத்திய அதிகாரி செபஸ்தியான் பிள்ளை தர்சனும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (8)

# 3,937 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் 3,937 குடும்பங்கள் மீள்குடியேறியுள்ளதுடன், 233 குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவின் கீழான மீள்குடியேற்றம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பச்சிலைப்பள்ளி பிரிவில் உள்ள 18 கிராம அலுவலர் பிரிவுகளில் 3,937 குடும்பங்களைச் சேர்ந்த 12,706 பேர் மீள்குடியேறி இருக்கின்றனர்.

இருப்பினும், கண்ணிவெடி அகற்றப்படாமையினால் பல குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாதுள்ளன.

மீள்குடியேற்றத்திற்காக 233 வரையிலான குடும்பங்கள் விண்ணப்பித்திருக்கின்றன. மேலும் பல குடும்பங்கள் மீள்குடியேற்றத்திற்கு விண்ணப்பிக்கவில்லை.

ஏற்கனவே விடுவிக்கப்பட்ட முகமாலை, வேம்பொடுகேணிப் பகுதிகளில் குறைந்தளவான மீள்குடியேற்றத்திற்கே பதிவுகள் செய்யப்பட்டிருந்தன.

இருப்பினும் நிலங்கள் விடுவிக்கப்பட்டதையடுத்து 78 குடும்பங்களைச் சேர்ந்த 245 பேர் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளார். (3-8)

# வீட்டுத்திட்டம் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

வவுனியா, கணேசபுரம் 40 வீட்டுத்திட்ட மக்கள் தமக்கு வீட்டுத்திட்டம் வழங்கக்கோரி வவுனியா பிரதேச செயலகத்திற்கு முன்னால் நேற்று முன்தினம் நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.


அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா, கணேசபுரம் 40 வீட்டுத்திட்டத்தில் குடியேற்றப்பட்ட நாம் அடிப்படை வசதிகள் இன்றி கொட்டகைக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றோம்.

எங்களது வீடு வசிப்பதற்கு உகந்ததாக இல்லை. தற்போது மழைகாலம் ஆரம்பமாகவுள்ள நிலையில் நாம் அதற்குள் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த காலங்களில் மழை பெய்யும் போது இடம் பெயர்ந்து பாடசாலையில் தங்குவதும், மழை விட்டதும் வீடு வருவதுமே எமது வழக்கமாக இருந்தது.

இந்நிலையில் தற்போது பொருத்து வீடு வழங்குவதாக பதிவுகள் இடம்பெற்றிருந்த போதும் வீடற்ற எம்மை புறக்கணித்து வீடு உள்ள பலருக்கும் வீடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், அரசியல்வாதிகள், அதிகாரிகள் எமது நிலையைக் கருத்தில் கொண்டு எமக்கும் வீட்டுத்திட்டத்தை வழங்க வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (3-8-250)



இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்ட தொழிற்பயிற்சி அதிகார சபை ஆளணியினர் இரத்ததானம் வழங்கினர்.

(படங்கள்: -மல்லாவி செய்தியாளர்)

# மின்சாரக்கம்பத்துடன் மோதியது வாகனம்

## ஒருவர் பலி!



(மல்லாவி )

வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பூவரசாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இராசேந்திரகுளம் என்னும் இடத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மகேந்திரா பிக்கப் வாகனம் ஒன்று வீதியின் அருகாமையில் இருந்த மின் கம்பத்துடன் மோதுண்ட விபத்துச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒருவர் பலியாகியுள்ளதாக பூவரசங்குளம் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 6.05 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவது.

செட்டிகுளம் பகுதியிலிருந்து நெளுக்குளம் நோக்கி பயணித்த மகேந்திரா பிக்கப் வாகனம் ஒன்று இராசேந்திரகுளம் பகுதியை அண்மித்த வேளையில் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியின் ஓரமாக இருந்த அதி சக்தி வாய்ந்த மின்சாரம் செல்லும் மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் மின் கம்பம் முறிந்து வாகனத்தின் மீது வீழ்ந்த போது மின்சாரம் தாக்கி வாகனத்தில் பயணித்த நபர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவத்தின் போது, அநுராதபுரம் றம்பாவை என்னும் இடத்தில் உள்ள நலன்புரி நிலையத்தில் வசிக் கும் முகமட் கனி மிஸ் மால் வயது - 30 என்ற குடும்பஸ்தரே பரிதாபகரமாக உயிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் சடலத்தை மீட்டு வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்துள்ளதுடன் விபத்துக்குள்ளான வாகனத்தை மீட்டு பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் சென்றுள்ளனர். (3-8-15-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்திப் பயனாளிகளின் போராட்டம்



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாக சமுர்த்தி பயனாளிகள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள், சமுர்த்தி இடைநிறுத்தப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் மாவட்ட அரசாங்க அதிபரின் உதவிச் செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது, சமுர்த்தி தொடர்பான ஆய்வொன்று நடைபெற்று வருவதன் காரணமாகவே தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அவரிடம் மகஜரொன்றை கையளித்துள்ளனர். (8)

# வாழ்வாதார உதவி

(புதுக் குடியிருப்பு )

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் புதுக்குடியிருப்பு உடையார்கட்டை சேர்ந்த குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவி வழங்கப்பட்டுள்ளது. கடந்த கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தோராவில் கிழக்கு உடையார்கட்டு புதுக்குடியிருப்பை முகவரியாகக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கே வாழ்வாதார உதவியாக ரூபா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் செலவில் புதிய கோழிக்கூடு அமைத்து 75 கோழிகளும் அதற்கான தீவனங்களும் வழங்கப்பட்டுள்ளன.(8)

# 167 ஆவது நாளாகவும் தொடர்கிறது

(வவுனியா)

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது போராட்டம் நேற்று 167 ஆவது நாளை கடந்தது.

அவர்கள் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் கூற வலியுறுத்தியும், அவர்களை கண்டுபிடிக்கக் கோரியும் நாம் மேற்கொண்டு வரும் போராட்டம் 167 நாட்களைக் கடந்துள்ளன.

எமக்கு ஜனாதிபதியும் அவர் சார்ந்த அமைச்சர்களும் பல்வேறு வாக்குறுதிகளை தந்த போதும் அவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

நாம் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில் வீட்டில் உள்ள ஏனைய உறவுகளையும் பிரிந்து வாழ வேண்டியுள்ளது.

அத்துடன் நாம் இந்த நல்லாட்சி அரசாங்கத்திடம் நீதி கோரி தினமும் செத்துக் கொண்டிருக்கின்றோம் என தெரிவித்துள்ளனர்.



இதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட 7000 இற்கும் மேற்பட்ட கடிதங்களுக்கும் இதுவரையில் பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.(7-8)




# டெங்குவை ஒழிப்போம் விழிப்புணர்வு கருத்தரங்கு

பெருகிவரும் டெங்கு தொடர்பானகருத்தரங்குநாளை 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் கிளிநொச்சி சிவநகர் முதியோர் வளாகத்தில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் அனுசரணையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் டெங்கு தொடர்பான வீதி நாடகமும் நடத்தப்படவுள்ள அதே வேளை டெங்கு நுளம்பின் பெருக்கமும் அதனால் ஏற்படுகின்ற பாதிப்பு பற்றியும் டெங்கு நுளம்பு பெருக்கம் அடைந்து வரும் இக் கால கட்டத்தில் பொதுமக்கள் இதனைத்தடைசெய்வதற்குசெய்ய வேண்டிய முன்னேற்பாடுகள் பற்றியும் இந் நுளம்புகள் பெருகுவதற்கு காரணியாகவுள்ள தகரம், பொலித்தீன் போன்ற பொருட்களை குறிப்பிட்ட சில இடங்களில் கொண்டு வந்து சேர்த்து பிரதேசசபை மூலமாக அவற்றை எடுத்துச் செல்வதற்கான ஒழுங்குகளையும் எந்தெந்த இடங்களில் கழிவுப் பொருட்களை சேகரிப்பது, அவற்றை பிரதேச சபையினர் எப்போது எடுத்துச் செல்வது என்பது தொடர்பான விடயங்கள் பற்றியும் இக் கருத்தரங்கில் ஆராயப்படவுள்ளன.

எனவே சிவநகர் மற்றும் அவற்றை அண்மித்த கிராம மக்களை தவறாது இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு டெங்கு தாக்கத்தில் இருந்து விடுபடுவதற்கு ஒத்துழைப்பு தருமாறு கிளி. மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.(8-254)

# முறியடிக்கப்பட்டது சட்டவிரோத மரக்கடத்தல்

## மூவர் கைது



(பூநகரி)

பூநகரி முக்கொம்பன் அடர்ந்த காட்டுப் பகுதியில் பாலை மரங்களை அறுத்து தீராந்தியாக்கி வந்த மரத் திருட்டுக் கும்பலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பூநகரிப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து கடந்த திங்கட்கிழமை பூநகரிப் பொலிஸ் நிலைய உதவி பரிசோதகர் ஏக்கநாயக்கா தலைமையில் சென்ற குழுவினர் கடத்தலுக்கு தயாரான பாலை மரத் தீராந்திகளையும் இக் கடத்தலில் ஈடுபட்ட மூவரையும் கைது செய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர். பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய இப் பொருட்களை நேற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தியுள்ளதாக பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (8-84)

# நிலமெஹெவர சேவைத்திட்டம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் பணிப்பின் பேரில் ஆரம்பிக்கப்பட்ட நில "மெஹெவர" சேவைத்திட்டத்தின் கீழ் காலங்கடந்த இறப்பு, பிறப்பு பதிவுகள், பிறப்பு, இறப்பு சான்றிதழ் பிரதி பெறல், தேசிய அடையாள அட்டை, முதியோர் ஆள் அடையாள அட்டை, மூக்குக் கண்ணாடிகள் வழங்கல் போன்ற பல்வேறுபட்ட சேவைகள் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நாளை மறுதினம் 12 ஆம் திகதி சனிக்கிழமை 8.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சகல அமைச்சுக்களில் இருந்தும் திணைக்களங்களில் இருந்தும் அலுவலர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (8-84)

# துவிச்சக்கரவண்டிகள் வழங்கி வைக்கப்படவுள்ளன

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் போக்குவரத்து பிரச்சினையை எதிர்நோக்கும் முழங்காவில் மகாவித்தியாலயம், முக்கொம்பன் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த 80இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அமைச்சின் செயற்றிட்டத்தின் கீழ் நாளை 11 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (8-84)



ஓமந்தை பரநாட்டகல்லுக்கும் நொச்சிமோட்டை பாலத்திற்கும் இடையில் பேருந்து வேகக்கட்டுப்பாட்டை இழந்த பேருந்து வீதியை விட்டு இறங்கி விபத்துக்குள்ளாகியது.




முல்லைத்தீவு, துணுக்காய் கோட்டை கட்டிய குளம் மகா வித்தியாலய மாணவர்களுக்கு புலம்பெயர் தமிழர் அமைப்பான நியூயோர்க் உதவும் கரங்கள் சமூக சேவை அமைப்பால் துவிச்சக்கரவண்டிகள், கற்றல் உபகரணங்கள் மற்றும் ஊக்குவிப்புப் பணம் என்பன கடந்த வாரம் பாடசாலை வளாகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத் தரிசனம்

**பன்னிரெண்டு வயதில் கலைத்துறைக்குள் அடியெடுத்து வைத்த இவர் காதல் காவியமாகிறது. தங்கப்பதக்கம் போன்ற சமூக நாடகங்களில் நடித்து நாடகத்துறைக்குள் நுழைந்தார்.காத்தவராயன்கூத்தில் பல பாத்திரங்களை ஏற்று பலரின் பாராட்டையும் பெற்றார். கலாபூஷணம் நவம் அவர்களைக் குருவாகக் கொண்டு இயங்கிய இவர் 2009 இல் அவரால் அண்ணாவியார் என்ற பட்டத்தைப் பெற்றார். இவர் உடுக்குக்கலையிலும் விற்பன்னர். தந்தையாரிடம் உடுக்கு பயின்ற இவர் இன்றும் உடுக்கலையை முன்னெடுத்து வருகின்றார். பாரம்பரியக்கலைகளில் ஒன்றான குடமூதற்கும்மி ஆட்டத்தைக் கட்டிக்காத்து வருகின்றார்.1990களில் முப்பதிற்கு மேற்பட்ட தெருவெளி நாடகங்களில் நடித்தார்.2011 இல் இடம்பெயர்ந்து வவுனியா இடைத்தங்கல் முகாமில் இருந்த போதும் காத்தவராயன் கூத்தினை அளிக்கை செய்து தனக்கென புகழாரம் சூட்டிக்கொண்டார்.1969.01.01 திகதி பிறந்த அண்ணாவியார் மு.காளிமுத்து அவர்கள் தன்னைப்பற்றியும் தன் கலைப்பணி பற்றியும் வலம்புரிக்கு வழங்கிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.**



## உடுக்குக்கலைஞர் அண்ணாவியார் மு.காளிமுத்து அவர்களுடனான சந்திப்பு

## ‘குரு நிறைவானவராக இருந்தால் நல்ல மாணவர்களை உருவாக்கலாம்’

**❖ தங்களின் கலைத் துறையின் ஆரம்பம் பற்றி...?**

என்து தந்தையார் ஓர் அண்ணாவியார், உடுக்குக் கலை விற்பன்னர். அதன் காரணமாக 12 வயதில் கலைத்துறைக்குள் நுழைந்தேன். விடியாத வாழ்வு, காதல் காவியமாகிறது. தங்கப் பதக்கம் போன்ற சமூக நாடகங்களில் நடித்தேன். இந்நாடகங்களை நெறியாள்ளர்களான செபஸ்தியாம்பிள்ளை, ஸ்ரீதரன் ஆகியோர் நெறிப்படுத்தினர். 1987 சிவநகர் சிவன் கோவிலில் ஒரே மேடையில் மூன்று கூத்துக்களை அளிக்கை செய்திருந்தோம், இதில் கிருஸ்ணர், சுருட்டி, காளி ஆகிய பாத்திரங்களை ஏற்று நடித்து முதலாமிடம் பெற்றேன். இந்தக் கூத்தினைப் பழக்கியவர் கலாபூஷணம் அண்ணாவியார் நவம் அவர்கள். இதற்கு நடுவராக இருந்தவர் மெட்ராஸ் மெயில். இக்கூற்றினை இதே ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அறிக்கை செய்திருந்தோம். கூத்து ஆடுவதற்கு காரணமானவர் அண்ணாவியார் நவம் அவர்தான். இவர்தான் எனது குரு. இவர்தான் 2009 ஆம் ஆண்டு அண்ணாவியார் பட்டத்தைத் தந்தார். 1990 இல் விடுதலைப் புலிகளின் கலைப் பண்பாட்டுக் கழகத்தில் உறுப்பினராக இணைந்து 30 இற்கு மேற்பட்ட தெருவெளி நாடகங்களை நடித்தேன். இந்த ஆரம்பங்கள்தான் இன்று என்னை ஓர் அண்ணாவியார் நிலைக்கு உயர்த்தியிருக்கிறது.

**❖ தாங்கள் பல இடங்களில் கூத்தினை அளிக்கை செய்து வருகின்றீர்கள். அந்த அனுபவங்கள் பற்றி?**

எனது வேணாவில் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் ஒவ்வொரு சிவராத்திரியிலும் 30ற்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு கூத்தினைப்பழக்கி கூத்தினை நிகழ்த்தி வருகின்றோம். இரவு 10 மணிக்குத் தொடங்கி அதிகாலை 5.30 மணிக்கு நிறைவு செய்வோம். பார்வையாளர்கள் விடிய விடிய இருந்து பார்ப்பார்கள். இவற்றோடு கிளிநொச்சி, பளை, உடையார்கட்டு முள்ளியவளை, நெடுங்கேணி, நெடுந்தீவு போன்ற இடங்களிலும் கூத்தினை அளிக்கை செய் தோம். 2015 ஆம் ஆண்டு நெடுந் தீவு முருகன் கோவிலில். கூத்து நிகழ்ந்து கொண்டு இருக்கும் போது மழை வந்து விட்டது. ஆலய பரிபாலன சபையினர் சொன்னார்கள் கோவிலுக்கு உள்ளே செய்யும் படி. பக்த அடியார்கள் அலைமோதி அதிகாலை வரை அந்தக் கூத்தினை அளிக்கை செய்தோம். எமது பிரதே சத்தில் கலை இருக்கிறது. ஆனால் முன்னர் கூத்தாடுதல் என்றால் பல இளைஞர்கள் விரும்பி வருவார் கள். இன்று வீடு வீடாகச் சென்று கலைஞர்களைத் தேட வேண்டியுள் எது. சினிமாவின் பால் ஈர்க்கப்பட்ட இளம் சமூகம் பாரம்பரியக் கலை களில் ஈடுபடத் தயங்குகின்றது.

**❖ மக்கள் இடம்பெயர்ந்து வவுனியா முகாமில் இருந்தபொழுது அங்கு கூத்தினை அளிக்கை செய்தீர்கள். அதுபற்றி?**

2011 ஆம் ஆண்டு காலப் பகுதியில் வவுனியா சோன்போர் இடைத் தங்கல் முகாமில் இருந்த பொழுது அங்குள்ள கலைஞர்கள் இருபது பேரைத் தெரிந்தெடுத்து காத்தவராயன் கூத்தினைப் பழக்கி [illegible] தடவைகள் அளிக்கை செய்திருந்தோம். நல்ல வரவேற்பு, மக்கள் தொடர் நாடகமோ, தொலைக் காட்சிப் பாவனையோ அற்ற சூழலில் கூத்திற்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. இந்த முகாமில் இருந்த மக்களை வவுனியா செட்டிகுளம், கதிர்காமம் இடைத்தங்கல் முகாமிற்கு மாற்றினார்கள்.அங்கும் முகாமில் பல பிரதேசங்களை உள்ளடக்கிய கலைஞர்களைத் தெரிவு செய்து காத்தவராயன் கூத்தினைப் பழக்கி அங்கிருந்த இராணுவ அதிகாரி அபயக்கோன் அவர்களிடம் அனுமதி பெற்று இரண்டு உழவு இயந்திரப் பெட்டிகளை மேடையாக் கி ஒரு முறை ஆற்றுகை செய்தோம். மக்கள் இக்கூத்தினை விருப்பத்துடன் பார்த்தார்கள் மக்கள். இராணுவ அதிகாரியும் விடிய விடிய இருந்து பார்த்தார்.இராணுவ அதிகாரியும் மக்களும் மீண்டும் இக் கூத்தினை [illegible] இன்னொரு தடவை கூத்தினை அளிக்கை செய்தோம். இரவு 8 மணிக்குத் தொடங்கி அதிகாலை 5.30 மணிக்கு முடியும். அதுவரைக்கும் எல்லோரும் உற்சாகத்துடன் கூத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.நடிகர்கள் திறம்பட நடித்தார்கள். அதனால் கூத்து வெற்றி நடைபோட்டது. அந்த முகாம் கூத்து அனுபவம் என்றும் இனிமையாகவே உள்ளது.

**❖ தாங்கள் உடுக்குக் கலையில் ஒரு விற்பன்னராக உள்ளீர்கள் தங்களின் உடுக்குக்கலை பற்றி?**

எனது தந்தையார் உடுக்குக் கலை விற்பன்னர். அவரிடம் தான் உடுக்குக்கலையைப் பயின்றேன் எனது தந்தையார் காவடி எடுக்கின்ற போது நான் உடுக்கடிப்பேன். அப்போது எனக்கு வயது பன்னிரெண்டு. உடுக்கை அடித்துப்பாடும் போது பக்தர்களுக்கு பத்தி பரவசம் ஏற்படும். அதிலே வருகின்ற நாதம் இனிமையானது.காவடி எடுக்கின்ற ஒருவர் உடுக்கடித்து அதன் இசைக்கு ஆட வேண்டும். அவ்வாறு ஆடுகின்ற போது உரு ஏறும். அருள் கிடைக்கும்.இன்று ஆலயங்களில் நாதஸ்வர மேள வாத்தியங்கள் உயர்ந்து காணப்படுவதனால்உடுக்கின்தன்மை குறைந்துள்ளது. வீட்டில் அடிக்கடி உடுக்கை எடுத்து வாசிப் பேன். அருகில் உள்ள சிறுவர்கள் வந்து பார்ப்பார்கள், சிலர் காவடி எடுக்கும் போது சென்று உடுக்கடித்து வருகின்றேன். சிலர் பக்தி நிலை கொள்வதற்கு அதாவது உரு ஏறுவதற்கு உடுக்கை அடிக்கக் கேட்பார்கள். அங்கும் உடுக்கு அடிக்கின்றேன். காத்தவராஜன் கூத்துக் களில் மிருதங்கத்தைப் பயன்படுத்துவதைக் குறைத்து நான்கு உடுக்கைப் பயன்படுத்தி வாசித்தால் இன் னும் கூத்து சிறப்புறும். உடுக்குக் கலை தெய்வீகமான கலை. அது பாரம்பரியக் கலை. அந்தக் கலைகளை அழிய விடாது பாதுகாக்க இளம் சமூகம் முன்வர வேண்டும். அவ் வாறு முன்வைத்தால் தெய்வீகமான இக்கலையைக் கற்று விடலாம்.

**❖ தங்களது பிரதேசத்தின் பாரம்பரியக் கலை வடிவங்களில் ஒன்றான குடமூதற்கும்மியைக் கட்டிக் காத்து வருகின்றீர்கள். இதன் ஆட்ட வடிவத்தைக் கூறுங்கள்?**

நான் இந்தக் குடமூதற்கும்மி ஆட்டத்தை கலாபூஷணம் அண்ணாவியார் பொன். இராசரத்தினம் அவர்களிடம் தான் பயின்றேன். தற்பொழுது இதனைப் பழக்கி பல இடங்களில் மேடையேற்றி வருகின் றேன். பத்து அல்லது ஐந்து பேருடனும் ஆடலாம். மண்பானை ஒன்றினை எடுத்து அதன் வாயிற் பகுதியில் வெற்றிலைபட்டுத்துணிகட்டிசந்தனம், குங்குமம், திருநீறு பூசி பானைக்குள் பத்து அல்லது ஐந்து பாக்குகள் போடப்பட்டு ஒப்பிதமாகக் கையிலெடுத்து

“வீரத்தமிழ் தாயே
உன் பாதம் நாங்கள் வீறுடன்
போற்றி செய்கின்றோம்
சோரமின்றி நாம் கும்மியடித்திட
தீராத நல்லருள் தந்திடம்மா
உருட்டிக் கட்டிலில் மீதிலேறிக்
காத்தார் உல்லாச நித்திரை
செய்வாராம் அருட்டிக் கும்மி
அடியுங்கடி அவரை உருட்டிக்
கும்மியடியுங்கடி ”

என்றபாடலிற்குஏற்பபானையை அசைத்து அசைத்து ஏந்தி ஏந்தி இடையிடையே பானைக்குள் ஊதி, பாக்கின் ஒலி பானைக்குள்ளிலிருந்து ஒலிக்க விறுவிறுப்பாக ஆடுவோம். இந்தப் பாரம்பரிய நிகழ்ச்சியை 2015இல் இந்தியத் துணைத்தூதரகமும் மல்லிகைத்தீவு இளைஞர் கழகமும் இணைந்து நடத்திய பண்பாட்டு விழாவிலும் 2016இல் தேவிபுரம் அறநெறிப் பாடசாலையிலும், 2014 இல் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்திலும் 2017 இல் கோம்பாவிலிலும் யாழ்ப்பாணம் சுழிபுரத்திலும் கொழும்பு அவிசாவளையிலும் இன்னும் பல இடங்களில் இதனை நடத்தினோம். எமது பாரம்பரிய கலைகளில் இது முக்கியமான கலைவடிவம், ஆரம்ப காலங்களில் கரகம், காவடி, கிளார்நெற் போன்ற பாரம்பரியக் கலைகளை எமது பிரதேசத்தில் முன்னெடுத்துச் சென்றவர் கலைப்புலவர் வெ.ஆதப்பன் அவர்கள். அதனுடைய தொடர்ச்சியாக எமது பாரம்பரியக் கலைவடிவங்கள் அழியக் கூடாது என்பதற்காக எம்மாலான முயற்சிகளையும் தியாகங்களையும் செய்கின்றோம்.

**❖ 36 வருடங்களாக கலைப்பணியினை முன்னெடுத்து வரும் நீங்கள் கலையுலகிற்குள் மனந்திறந்து கூறுவது?**

கலைகளுக்கு என்றும் அளவிட முடியாத பெறுமதிகள் உள்ளன. அதனைத் துறைசார்ந்த கலைஞர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனோதானோ என்று ஒரு படைப்பை படைக்கலாகாது, இலக்கியப் படைப்பாளி தான் படைக்கும் படைப்பின் தரத்தை பரிசீலனை செய்தபின்னரே படைக்க வேண்டும். இது போலவே எல்லாத் துறை சார்ந்த படைப்பாளிகளும் தம் படைப்பின் தரத்தைப் பரிசீலனை செய்து கொள்ள வேண்டும். பார்வையாளர்களுக்கோ, வாசகர்களுக்கோ சலிப்பூட்டுவதாக இருக்கக் கூடாது. இவ்வாறு நிலை ஏற்பட்டால் கலைகள் மீதான, இலக்கியம் மீதான ஆர்வம் குன்றிப் போய்விடும். பாரம்பரியக் கலைகள் ஒரு சமூகத்தின் அடையாளமாக விளங்குபவை. அந்த அடையாளம் காலம் கடந்தும் உயிர்பெற்று வாழுபவை. எங்களிடம் வருகின்ற மாணவர்களுக்குத் தகுந்தமுறையில் விளக்கம் அளித்துப் பயிற்றுவிக்க வேண்டும். அவ்வாறு விளக்கமும், பயிற்சி அறிவும் என்னிடம் இல்லையென மாணவன் உணரும் முன்னர் நான் உணர்ந்து உரியவர்களிடம் கற்க வேண்டும். இல்லையாயின் தேட வேண்டும். குரு எப்பொழுதும் நிறைவானவராக இருக்க வேண்டும். அவ்வாறு நிறைவானவராக இருந்தால் பல மாணவர்களை தகுதியானவர்களாக உருவாக்க முடியும். அவர்கள் உருவாகினால் அடுத்த உருவாக்கைச் சரியாக உருவாக்குவார்கள், நாங்கள் முதலில் பூரணமாக உருவாகுவோம், பின்னர் அடுத்தவர்களை பூரணமாக உருவாக்குவோம்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருடாந்த எசல மகா பெரஹெரா இந்த வருடமும் சிறப்பான முறையில் நிறைவு செய்யப்பட்டமையை தெரிவிக்கும் பத்திரம் நேற்று முன்தினம் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது. குறித்த பத்திரம், தலதாமாளிகையின் தியவடன நிலமே நிலங்க தேலவினால் கண்டி ஜனாதிபதி மாளிகையில் வைத்து கையளிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, பெரஹெரவில் பங்குபற்றிய கலைஞர்களுக்கு பாரம்பரியமாக வழங்கப்படும் பரிசில்களும், சான்றிதழ்களும் இதன்போது ஜனாதிபதியால் வழங்கப்பட்டன. அத்துடன் ஸ்ரீதலதா மாளிகையின் "சிந்து" யானைக்குட்டிக்கு பரிசாக ஜனாதிபதியால் பழங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், நான்கு மகா விகாரைகள் மற்றும் ஏனைய விகாரைகளைப் பேணிச்செல்வோருக்கும் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# ஸ்ரீலங்கா டெலிகொம் தொடர்பில் எனக்கு எந்த அதிகாரமுமில்லை

## அமைச்சர் ஹரின் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தின் நடவடிக்கை தொடர்பாகவோ அது தொடர்பான பரிந்துரைகளை முன் வைப்பதற்கோ தனக்கு எந்த உத்தியோகபூர்வ அதிகாரமும் கிடையாது என தொலைத் தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்தில் சுமார் 800 மில்லியன் ரூபா நிதி மோசடி இடம்பெற்றதாக சில ஆவணங்களை முன்வைத்து பிரபல ஊடகம் ஒன்றின் மூலம் தொலைத்தொடர்பு மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சினை விமர்சித்தது தொடர்பாகவே அமைச்சர் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனமானது இலங்கை பங்குச் சந்தையின் கீழ் செயற்படும் ஒரு நிறுவனம் என்றும் அதில் 26% பங்குகள் மலேசியாவின் தனியார் நிறுவனம் ஒன்றிற்கே சொந்தம் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார்.

இதேவேளை, அண்மைக்காலங்களில் இருந்து ஸ்ரீலங்கா டெலிகாம் நிறுவனம் தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு அதிகமாக நவீன முறைகளை கையாள்வதால், தற்பொழுது பயன்படுத்தப்படாத செப்புக் கம்பிகளை நிறுவனத்தின் சட்ட விதிகளுக்கு அமைவாக ஏலத்தில் விட தீர்மானித்துள்ளதாக பொது முகாமையாளர் தெரிவித்தார். (இ-7)

# வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் அமைச்சர் ராஜித பதவி விலக வேண்டும்

## வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

"வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிட்டால், சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தாமாகவே முன்வந்து பதவி விலக வேண்டும்" என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சாடியுள்ளது.

மருத்துவக் கல்வியின் குறைந்தபட்ச தரநிலையை வர்த்தமானி அறிவித்தலில் இம்மாதம் 14 ஆம் திகதி வெளியிடுவதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன வாக்குறுதி அளித்துள்ள போதிலும் அவ்வாக்குறுதிகளை மீறும் வகையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அச்சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அச்சங்கம் இவ்வாறு கூறியுள்ளது.

"சுகாதார அமைச்சர் ராஜித, சட்ட சிக்கலை முன்வைத்து, மேற்படி வர்த்தமானி அறிவித்தலை காலம்தாழ்த்த முயன்று வருகின்றார். இந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டால், மாலபேயிலுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியின் உண்மை நிலை வெளிவரும் என்ற அச்சத்திலேயே அவர் வர்த்தமானி அறிவித்தலை காலம்தாழ்த்த முற்படுகின்றார்.

"குடும்பத்தை பாதுகாப்பதற்காக, நாட்டையே அதள பாதாளத்தில் தள்ளுவதற்கு அவர் முயன்று வருகின்றார். வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிட்டால், அவர் தாமாகவே முன்வந்து பதவியை இராஜினாமா செய்வதே சிறந்தது" என்று அச்சங்கம் மேலும் கூறியுள்ளது. (இ-7)

# 'சயுரால' கப்பலில் கடற்படை தளபதி

இலங்கை கடற்படையின் புதிய தொழில்நுட்ப ஆழ்கடல் கவனிப்பு கப்பலான 'சயுரால' கப்பலுக்கு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நேற்று முன்தினம் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

கடற்படையிடம் இந் தக் கப்பல் உத்தியோக பூர்வமாக கையளிக் கப்பட்ட பின்னர் கடற் படைத் தளபதி மேற்கொண்டுள்ள முதல் கண்காணிப்பு விஜயம் இதுவாகும்.

இதன்போது கப்பலின் செயற்பாடுகளை பார்வையிட்ட அவர், கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் நிஷாந்த அமரோசா உட்பட கப்பலின் ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடியுள்ளார்.

இந்தியாவின் கோவா கப்பல் கட்டும் தளத்தில் இலங்கை கடற்படைக்கென நிர்மாணிக்கப்பட்ட குறித்த கப்பல் கடந்த ஜூலை மாதம் 28 ஆம் திகதி கொழு ம்பு துறைமுகத்தை வந்த டைந்தது.

இந்தக் கப்பல் கடந்த 2 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தலைமையில் இலங்கைகடற்படையிடம் உத்தி யோகபூர் வமாக ஒப்படைக்கப்பட்டது.

இலங்கை கடற்படையின் மிகப்பெரிய உயர் தொழில்நுட்ப கப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# லஹிரு பிணையில் விடுவிப்பு

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்து அங்கிருந்த பொருட்கள் மற்றும் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய சம்பவம் தொடர்பில் இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்நிலையில், நேற்று அவரை பிணையில் விடுவித்து கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: செவ் 7இல்<br>தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்<br>தொ.இ: B/6661 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: சூரிசெவ் 3இல்<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/6860 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 56 செவ் 7இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:MSc/தனியார் தொழில் USA<br>தொ.இ: B/6664 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6862 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 29<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L/ குருக்கள்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6667 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா:செவ் 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6864 |
| பிறப்பு: 1959 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>தகைமை/தொழில்:SSC/ அவுஸ்ரேலியா PR<br>தொ.இ: B/6669 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ் 1இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ஆசிரியர்<br>தொ.இ: G/6864 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 300 [illegible]



யாழ். மண்ணில் முதன் முறையாக
சினிமா பாடல்களுடன்
பிரபல தென்னிந்திய பாடகர் கலைமாமணி
உன்னிகிருஷ்ணன்
உத்ரா உன்னிகிருஷ்ணன்
இணைந்து வழங்கும்
இன்னிசை பாடிவரும்...
மாபெரும்
திரை இசை நிகழ்ச்சி
மாலை 6.00 மணிக்கு
இம் மாதம் ஆகஸ்ட் 12 இல்



(006)
நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு: K.T.பிரசாத்
டிக்கெட் கிடைக்குமிடங்கள்:
➤ பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். 021 222 6693
➤ த போன் சொப், நெல்லியடி. 077 285 0285
யாழ். ஸ்ரான்லி வீதி லிங்கம் கூல்பார் முன்பாக உள்ள மைதானம் (வெலிங்டன் தியேட்டர்)
Event Management C.A.C
Tel: 077 550 4910
டிக்கெட்டுக்கள்: 300/= 500/= 1000/=


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஜராத் மாநிலங்களவைத் தேர்தலில் காங்.வேட்பாளர் அகமது பட்டேல் வெற்றி



குஜராத் மாநிலங்க ளவை தேர்தலின் வாக்கு எண்ணிக்கை நள்ளிரவு வரை நீடித்த நிலையில், காங்கிரஸ் வேட்பாளர் அகமது பட்டேல் வெற்றி பெற்றார்.

குஜராத் மாநிலத்தில் 3 இடங்களுக்கான மாநிலங்க ளவை தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது. ஏற்கனவே இராஜினாமா செய்து பா.ஜனதாவில் இணைந்த காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் 6 பேர் பா.ஜ.க. வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களித்தனர். வாக்குப்பதிவு நடைபெற்ற போது, காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் இருவர், தாங்கள் பதிவு செய்த வாக்குச்சீட்டை பா.ஜ.க தலைவரிடம் காண்பித்தனர்.

இது தொடர்பாக தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்த காங்கிரஸ், கட்சி மாறி வாக்களித்த எங்களது கட்சி எம்.எல்.ஏக்கள் வாக்கை செல்லாது என அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியது. அவர்களை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்றும் விரும்புகிறது.

இதற்கு பா.ஜ.க. கடும் எதிர்ப்பு தெரிவித்தது. டில்லியில் உள்ள தலைமை தேர்தல் ஆணையத்தில் குவிந்த மத்திய அமைச்சர் ரவிசங்கர் பிரசாத், நிர்மலா சீதாராமன், பியூஸ் கோயல், உள்ளிட்டோர் காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். அதேபோல், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களும் தேர்தல்ஆணையத்தில்சென்று முறையிட்டனர்.

இதையடுத்து வாக்குப் பதிவின்முழுமையான வீடியோ காட்சிகளை ஆய்வு செய்ய தேர்தல் ஆணையம் முடிவு செய்தது. இதன் காரணமாக வாக்கு எண்ணிக்கை நிறுத்தி வைக்கப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் முடிவுக்காக மத்திய அமைச்சர்கள் பலரும் அலுவலகத்தின் வாசலில் காத்து கிடந்தனர்.

வீடியோ காட்சிகளை ஆய்வு செய்த பின்னர், கட்சி மாறி பா.ஜ.கவுக்கு வாக்களித்த 2 காங்கிரஸ் எம்.எல். ஏக்களின் வாக்குகள் செல்லாது என தேர்தல் ஆணையம் அறிவித்தது. பின்னர் நள்ளிரவு வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

இதில், காங்கிரஸ் வேட்பாளர் அகமது பட்டேல் தனக்கு தேவையான 44 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார். அதேபோல், பா.ஜ.க. தலைவர் அமித்ஷா மற்றும் ஸ்மிரிதி ராணி ஆகிய இருவரும் வெற்றி பெற்றனர். அகமது பட்டேலுக்கு நெருக்கடி கொடுத்த காங்கிரஸில் இருந்து ராஜினாமா செய்து பா.ஜ.கவில் போட்டியிட்ட ராஜ்புட்டுக்கு 38 வாக்குகள் கிடைத்தன.

அகமது பட்டேலின் வெற்றியை காங்கிரஸ் கட்சியின் தொண்டர்கள் உற்சாகமாக கொண்டாடி வருகின்றனர். கட்சிக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என மூத்த தலைவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

வெற்றி குறித்து டுவிட்டரில் கருத்து தெரிவித்த அகமது பட்டேல் வாய்மையே வெல்லும் என்று குறிப்பிட்டு இருந்தார். சில எம்.எல். ஏக்களை மட்டுமே பா.ஜ.க வால் விலைக்கு வாங்க முடிந்ததாக ப.சிதம்பரம் தெரிவித்தார். (3-8)

# கால்வாய்க்குள் பாய்ந்தது வான்

## குழந்தை உட்பட 9 பேர் பலி



ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் 200 அடி ஆழத்தில் உள்ள கால்வாய்க்குள் நேற்று வான் பாய்ந்த விபத்தில் ஒரு குழந்தை உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் ஏரி, குளங்கள் நிறைந்து காணப்படுகின்றன. வெள்ளநீர் அடித்துச் சென்றதால் மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் வீதி கள் பழுதடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

இந்நிலையில், ரேசாய் மாவட்டத்தில் உள்ள மாஹோர் தாலுகா, ஜம்சலான் பகுதி வழியாக பயணிகளை ஏற்றிக் கொண்டு ஒரு டெம்போ டிரா வலர் வான் நேற்று காலை வந்து கொண்டிருந்தது. ஒரு குறுகிய வளைவில் வானை திருப்ப சாரதி முயன்ற போது பழுதடைந்த வீதியால் கட்டுப்பாட்டை இழந்த வான் வீதியை விட்டு விலகிச் சென்று உரு ண்டவாறு பக்கவாட்டில் 200 அடி ஆழத்தில் இருக்கும் கால்வாய்க்குள் கவிழ்ந்தது.

விபத்து பற்றி தகவலறிந்த பொலிஸார், மீட்புப் படையினர் அம்புலன்ஸ் வான்களுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். கால்வாய்க்குள் மூழ்கிய வானுக்குள் சிக்கியிருந்த சிலரை உயிருடன் மீட்டனர். 9 பேர் இறந்த நிலையில் மீட்கப்பட்டனர்.

கால்வாயில் பெருக்கெடுத்து ஓடிய நீரில் அடித்துச் செல்லப்பட்ட குழந்தையின் சடலத்தை கண்டுபிடிக்கும் முயற்சியில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்விபத்தில் காயமடைந்த மேலும் சிலர் அருகாமையிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால்பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (3-8)

பாரதச் செய்தி

# இட ஒதுக்கீடு கோரி மராத்தியர்கள் போராட்டம்

## மும்பை நகரம் ஸ்தம்பித்தது



மராட்டியம் மாநிலத்தில் பரவலாக வாழ்ந்து வரும் மராத்தி இன மக்கள் தங்களுக்குரிய இடஒதுக்கீடு வழங்கக்கோரி நேற்று நடத்திய மாபெரும் பேரணியால் மும்பை நகரம் ஸ்தம்பித்தது.

மராட்டிய மாநிலத்தில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 32 சதவிகிதம் மராத்தியர்கள் வாழ்ந்து வருகின்றனர். வரலாற்று பெருமை மிக்க மன்னர் வீரசிவாஜியின் வம்சாவளியினராக அறியப்படும் இவர்கள் தங்களை சிறுபான்மையினர் பட்டியலில் சேர்த்து மத்திய மாநில அரசுகள் அளித்து வரும் கல்வி, வேலைவாய்ப்பு இடஒதுக்கீடு மற்றும் இதர மானிய சலுகைகள் கிடைக்குமாறு செய்ய வேண்டும் எனக் கோரி பல முறை, பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

இந்நிலையில், மீண்டும் இதே கோரிக்கைகள் தொடர்பாக மராத்தா, கிராந்தி, மோர்ச்சா என்ற அமைப்பின் சார்பில் நேற்று பல்லாயிரக்கணக்கான மராத்தியர்கள் மாநில தலைநகர் மும்பையில் உள்ள பைகுலா பகுதியில் தொடங்கி மாபெரும் அமைதிப் பேரணி நடத்தி வருகின்றனர். இது தவிர, மாநிலத்தின் பிற பகுதிகளிலும் வசிக்கும் மராத்தியர்கள் இதேபோல பேரணி நடத்தி வருகின்றனர்.

தங்களது நிறைவேற்றப்படாத பழைய கோரிக்கைகளுடன், கடந்தாண்டு கோபார்டி பகுதியில் பலாத்காரம் செய்து கொல்லப்பட்ட தங்களது இனத்தைச் சேர்ந்த 14 வயது சிறுமியின் மரணத்திற்கு காரணமானவர்களை கண்டுபிடித்து தண்டிக்கத் தவறிய அரசை எதிர்த்து நேற்றைய பேரணி நடத்தப்படுவதாக மராத்தா, கிராந்தி, மோர்ச்சா அமைப்பைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவாக சிவசேனா எம்.எல்.ஏக்கள் மராட்டிய சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

சட்டசபை வளாகத்தில் அமர்ந்து அரசை கண்டித்து முழக்கங்களை எழுப்பியவாறு தர்ணா போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

மராத்தா, கிராந்தி,மோர்ச்சா அமைப்பினர் நேற்று நடத்திய பேரணியால் மும்பை நகரின் பல முக்கிய வீதிகளில் உள்ள கடைகள், வர்த்தக நிறுவனங்கள் மூடிக்கிடந்தன. போக்குவரத்து நெரிசலால் அலுவலகங்களுக்குச்செல்வர்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகினர். (3-8)

# ஆப்கானிஸ்தான் எல்லையோர தற்கொலைப்படை தாக்குதல்

## 4 பாக். இராணுவ வீரர்கள் பலி


பாகிஸ்தான் நாட்டின் வடமேற்கு பகுதியில் ஆப்கானிஸ்தான் எல்லையோரம் நேற்று தற்கொலைப்படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர்கள் 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

பாகிஸ்தான் நாட்டின் வடமேற்கு பகுதியில் ஆப்கானிஸ்தானின் எல்லையோரம் அமைந்துள்ள மலாகந்த் மாகாணம் தீவிரவாதிகளின் சொர்க்க புரியாக உள்ளது. இம்மாகாணத்தில் தாலிபான்கள் உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவர்களை அழிக்கும் பணியில் அந்நாட்டு இராணுவம் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், இம் மாகாணத்தில் நேற்று முன்தினம் இரவு பாதுகாப்பு படையினர் வழக்கமான தேடுதல் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு நுழைந்த தீவிரவாதி தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டுகளை வெடிக்க வைத்தான். இந்த தாக்குதலில் பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் 4 பேர் உடல் சிதறி பலியானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலியான இராணுவ வீரர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள அந்நாட்டின் புதிய பிரதமர் அப்பாஸி, உயிரிழந்த இராணுவ வீரர்களின் ஒவ்வொரு துளி இரத்தத்திற்கும் தீவிரவாதிகள் பதில் கூற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (8)

# இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை சாத்தியமற்றது



இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை சாத்திய மற்றது என சீனா தெரிவித்துள்ளது. அத்துடன், டோக்லாம் எல்லைப் பகுதியிலிருந்து இருநாட்டு படைகளும் ஒரே நேரத்தில் பின்வாங்க வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கைக்கும் சீனா மறுப்புத் தெரிவித்துள்ளது.

இருநாட்டு எல்லைப் பகுதியான டோக்லாம் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவுகின்ற நிலையில் சீனாவுக்கான எல்லை மற்றும் கடற்பகுதி விவகாரத்துறை அமைச்சின் துணைப் பொது இயக்குநர் வாங் வென்லி மேற்படி தெரிவித்துள்ளார்.

இதன்போது, காஷ்மீர் மற்றும் உத்தரபிரதேச எல்லைக்குள் சீனப் படையினர் நுழைந்தால் இந்தியா என்ன செய்யும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "டோக்லாம் பகுதியில் ஒரே ஒரு இந்திய வீரர், ஒரு நாள் இருந்தால் கூட அது எங்கள் நிலப்பகுதியில் அத்துமீறியதாகவே கருதப்படும். இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியாது. இந்தியா முதலில் தனது படைகளை திரும்பப் பெற வேண்டும் என்றார். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் குயாம்தீவு மீது ஏவுகணை வீச வடகொரியா திட்டம்



(பியாங்யாங்) அமெரிக்கா இராணுவ பயிற்சி மேற்கொள்ளும் குயாம் தீவு மீது நீண்ட தூரம் சென்று தாக்கும் க்வாசாங்-12 ஏவுகணையை வீசி தாக்க வட கொரியா திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது.

சமீப காலமாக வடகொரியா 5 தடவை ஏவுகணை சோதனை நடத்தியுள்ளது. ஜூலையில் 2 முறை கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை பரிசோதித்துள்ளது.

அமெரிக்காவை குறி வைத்து இந்த சோதனை நடத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனால் அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் ஐ.நா. சபை பொருளாதார தடை விதித்துள்ளது.

இது வடகொரியாவுக்கு கடும் எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இப்பொருளாதார தடை எங்கள் இறையாண்மைக்கு எதிரானது. அதற்கு அமெரிக்கா உரிய விலை கொடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பசுபிக் கடலில் உள்ள தனக்கு சொந்தமான குயாம் தீவு பகுதியில் அமெரிக்கா இராணுவ பயிற்சி மேற்கொண்டுள்ளது.

இதனால் கடும் எரிச்சல் அடைந்த வடகொரிய இராணுவம், "தற்போது அமெரிக்கா இராணுவ பயிற்சி மேற்கொள்ளும் குயாம் தீவு மீது நீண்ட தூரம் சென்று தாக்கும் க்வாசாங்-12 ஏவுகணையை வீச திட்டமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

அதற்கு பதிலடி கொடுக்கும் விதத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வட கொரியாவுக்கு கடும் எச்சரிக்கையுடன் மிரட்டல் விடுத்துள்ளார். (3-8)

# உலக சாதனை முயற்சியில் ஜேர்மன் மணல் சிற்ப கலைஞர்கள்



உலகின் மிக உயரமான மணல் கோட்டையை அமைக்கும் முயற்சியில் ஜேர்மன் சிற்பக் கலைஞர்கள் குழுவொன்று தங்களது இரண்டாவது முயற்சியில் இறங்கியுள்ளது.

தங்களது முதலாவது முயற்சி தோல்வியடைந்த நிலையில், தோல்வியில் கற்ற பாடங்களைக் கொண்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெறும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய மணற் சிற்ப கலைஞர்களால் கடந்த பெப்ரவரி மாதம் அமைக்கப்பட்ட 14.84 மீற்றர் உயரமான மணல் கோட்டையே உலகின் மிக உயரமான மணல் கோட்டையாக விளங்குகிறது. இந்த சாதனையை முறியடிக்கும் முயற்சியிலேயே ஜேர்மன் கலைஞர்கள் குதித்துள்ளனர்.

இதற்கு முன்னர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடிக்கும் வகையில், 14.15 மீற்றர் உயரமான மணல் கோட்டையொன்றை அமைக்கும் முயற்சியில் குறித்த ஜேர்மன் கலைஞர்கள் கடந்த செப்டெம்பர் மாதம் ஈடுபட்டிருந்தனர். ஆனால், சில தொழில்நுட்ப பிரச்சினைகள் காரணமாக அந்த முயற்சி தோல்வியடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## விமானம் விபத்து

(மொஸ்கோ) ரஷ்யாவின் செச்சினியக் குடியரசில் பரபரப்பு மிகுந்த நெடுஞ்சாலையொன்றில் சிறிய ரக விமானமொன்று வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வானொன்றில் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது.

விபத்தில் விமானி காயமடைந்த நிலையில், அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

குறித்த விமானம் புறப்படும்போது ஏற்பட்ட கோளாறின் காரணமாகவே இவ் விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் வான் கடுமையாக சேதமடைந்துள்ளது.

விபத்து நேர்ந்த சந்தர்ப்பத்தில் வான் சாரதி, வானுக்குள் இருக்கவில்லை என உள்ளூர் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். இதனால் யாருக்கும் பாதிப்பு இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# சீனாவில் நிலநடுக்கம்



சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி நூற்றுக் கணக்கானோர் பலியாகிருக்கலாம் என அரசு அச்சம் தெரிவித்திருந்த நிலையில் 30 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் நேற்று முன்தினம் மாலை கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. குவாங்கியான் நகரில் இருந்து 120 கி.மீ. தொலைவில் உள்ள ஜியுஜாய்கோவ் பகுதியில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7 ஆக பதிவாகியிருந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. பூமிக்கடியில் 6 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் உருவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கம் காரணமாக அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் குலுங்கின. பொதுமக்கள் பீதியடைந்து வீடுகளை விட்டு வெளியேறி தெருக்களில் ஒன்றுதிரண்டனர்.

சிச்சுவான் மாகாணத்தில் நிகழ்ந்த பயங்கர நிலநடுக்கத்தில் 100 பேர் வரை உயிரிழந்திருக்க வாய்ப்புள்ளதாக சீன அரசு தெரிவித்திருந்தது. இந்நிலையில், 13 பேர் பலியானதாக முதல்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேற்கு சீனாவில் நேற்று புதன்கிழமை மீண்டுமொரு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதில் 32 பேர் காயமடைந்துள்ளனர். பின்தங்கிய பகுதியான ஸின்ஜியாங் பகுதியில் ஏற்பட்டுள்ள இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.6 ஆக பதிவாகியுள்ளது. முழுமையான சேத விபரங்கள் குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

கடந்த 2008 ஆம் ஆண்டில் இதே மாகாணத்தில் நிலநடுக்கத்தில் சிக்கி 70 ஆயிரம் பேர் வரை பலியாகியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

# தென்னாபிரிக்காவில் ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி

தென்னாபிரிக்காவில் ஜனாதிபதி ஜேக்கப் ஷூமா மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது. ஜனாதிபதி ஷூமாவுக்கு ஆதரவாக 198 வாக்குகளும், எதிராக 177 வாக்குகளும் கிடைத்தன.

தென்னாபிரிக்க ஜனாதிபதியாக கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் ஜேக்கப் ஷூமா இருந்து வருகிறார். அவர் மீது பல்வேறு ஊழல் புகார்கள் உள்ளன. எனவே அவரை பதவி நீக்கம் செய்ய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் எம்.பிக்களிடம் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆளுங்கட்சி எம்.பிக்களே எதிராக இருந்ததால் ஜனாதிபதி ஷூமா பதவி இழப்பார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் யாரும் எதிர்பாராதவிதமாக நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வி அடைந்தது. ஜனாதிபதி ஷூமாவுக்கு ஆதரவாக 198 வாக்குகளும், எதிராக 177 வாக்குகளும் கிடைத்தன. எனவே ஷூமாவின் ஜனாதிபதி பதவி தப்பியது. இவர் மீது ஏற்கனவே 8 தடவை நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு அவற்றில் வெற்றி பெற்றுள்ளார். தற்போது 9 ஆவது முறை கொண்டு வரப்பட்டு வெற்றி பெற்று இருப்பது குறிப்பிடத்தக்கது. (3-8)




# பாரிஸில் பயங்கரவாத தாக்குதல்

## ஆறு பேர் படுகாயம்

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் அதிநவீன கார் ஒன்று மோதியதில் ஆறு பாதுகாப்பு வீரர்கள் படுகாயம் அடைந்துள்ளனர்.

வேண்டுமென்றே BMW மோட்டார் கார் ஒன்று மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

நேற்று காலை இடம்பெற்ற இச் சம்பவத்திற்கு தொடர்புடைய காரின் சாரதியை பொலிஸார் தேடி வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டு இடம் பெற்ற சார்லி ஹெப்டோ தாக்குதல்களை தொடர்ந்து, பயங்கரவாத தாக்குதல்களை தடுக்கும் நோக்குடன் ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே நேற்று வேண்டும் என்றே மேற்கொண்ட மோதல் சம்பவமானது பயங்கரவாத தாக்குதலாகவும் இருக்கலாம் என பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3-8)

# ஆப்கானில் பயங்கரவாத தாக்குதல்

வட ஆப்கானிஸ்தானில் தலிபான் அமைப்பினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில், 60 பேர் பலியாகியுள்ளனர். பின்தங்கிய கிராமமான ஷியாக் கிராமத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க, வடசார் ஈ போல் மாகாணத்தில் மிர்ஸா ஓலங்கா கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தின் போதும், பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட பொதுமக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் ஆப்கானிஸ்தானின் பாதுகாப்புப் படை வீரர்களும் உள்ளடங்குகின்றனர்.

கடந்த வியாழக்கிழமை இந்த மோதல் சம்பவம் ஆரம்பித்துள்ளது. இதன்போது, பள்ளிவாசல்கள் பலவற்றுக்கு தீவிரவாதிகள் தீ வைத்தனர். சுமார் 30 வீடுகள் தாக்கப்பட்டன. கிராமவாசிகள் பலர் கொல்லப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பணயக் கைதிகளாக பிடித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 235 பேரை தலிபான் அமைப்பினர் நேற்று முன்தினம் விடுவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# முப்பது மீனவர்களை கொன்ற போகோஹராம் தீவிரவாதிகள்



(அபுஜா) நைஜீரியா நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வரும் போகோஹராம் தீவிரவாதிகள் 30-இற்கும் மேற்பட்ட மீனவர்களை சுட்டுக்கொன்றுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் சம அளவில் வாழ்ந்து வரும் நைஜீரியா நாட்டில் இஸ்லாமிய சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட ஆட்சியை கொண்டு வர வேண்டும் என போகோஹராம் அமைப்பை சேர்ந்த தீவிரவாதிகள் ஆயுதமேந்திய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அங்குள்ள கிராமங்களுக்குள் கும்பலாக நுழையும் இவர்கள், அங்கு வசிக்கும் அப்பாவி மக்களை ஈவிரக்கமின்றி சுட்டுக் கொன்று குவிக்கின்றனர். கடந்த எட்டாண்டுகளாக இவர்களின் கொலை வெறிக்கு சுமார் 20 ஆயிரம் உயிர்கள் பலியாகியுள்ளன.

மேலும், அரசுக்கு எதிராக பல்வேறு பகுதிகளிலும், அண்டை நாடுகளிலும் வெடிகுண்டுத்தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றனர். இவர்களை வேட்டையாடும் பணியில் பன்னாட்டு இராணுவம் ஈடுபட்டுள்ளது. இருப்பினும், சமீப காலமாக இவர்களது செயற்பாடுகள் முன்பை விட வேகமாக உள்ளன.

இந்நிலையில், அந்நாட்டின் வடமேற்கு பகுதிகளில் உள்ள பல கிராமங்களில் வசிக்கும் 30 இற்கும் மேற்பட்ட மீனவர்களை தீவிரவாதிகள் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொன்றுள்ளதாக அம் மாகாண ஆளுநர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். கடந்த மாதத்திலிருந்து போகோஹராம் தீவிரவாதிகளின் தாக்குதலில் 117 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் அமைப்பு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதா?

## நாடாளுமன்றத்தில் கூட்டு எதிரணி கேள்வி

(கொழும்பு)

வடக்கில் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதா? எனக் கூட்டு எதிர்க்கட்சி ஆதரவு பாராளுமன்ற உறுப்பினர் பத்ம உதய சாந்த அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, கிழக்கு மாகாணத்தில் ஐந்து பொலிஸ் நிலையங்களை இலக்கு வைத்து புலிகள் அமைப்பு தாக்குதல் நடத்தியதில் கொல்லப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை, தாக்குதலின் போது சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்பீடுகள் மதீப்பீடு செய்யப்பட்டுள்ளதா? தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? என பத்ம உதயசாந்த எம்.பி. சட்டம்,ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்கவிடத்தில் கேள்விகளைத் தொடுத்தார். (இ-7)

# எனது பதவி விலகல் தொடர்பான செய்திகளில் உண்மையில்லை

## வெளிவிவகார அமைச்சர் ரவி மறுப்பு



(கொழும்பு)

அரசாங்கம் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் தான் வகித்த, சகல பதவிகளிலிருந்தும் தான் விலகிக் கொண்டதுடன், அப்பதவிகளிலிருந்து இராஜினாமா செய்து கொண்டதாக வெளியான செய்திகளில் எவ்விதமான உண்மையும் இல்லை என்று வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தன்னுடைய பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டுள்ளார்.

"இணையத்தளங்கள் சில மற்றும் சமூக வலைத்தளங்கள் சிலவற்றிலேயே மேற்படி செய்தி வெளியாகியுள்ளது. அந்தச் செய்தி தவறானது. அச்செய்தியை நான் கண்டிக்கின்றேன்" இதே வேளை, என் தொடர்பிலான சகல, சரியான தகவல்களையும் என்னுடைய அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் உத்தியோகபூர்வ சமூக வலைத்தளத்தின் ஊடாகவும் சகல மக்களையும் விரைவில் தெளிவுபடுத்துவேன் என்றும் அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

# ரவி விவகாரம்; ஒழுங்குப்பத்திரத்தில் நிச்சயம் உள்வாங்கியிருக்க வேண்டும்

## ஜே.வி.பி. தலைவர் சுட்டிக்காட்டு



வெளிவிவகார அமைச்சர் ரவி மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் சட்டப் பிரச்சினை இருக்கக் கூடிய போதிலும் அந்தப் பிரேரணை அனைத்துக்கும் முன்னதாக ஒழுங்குப்பத்திரத்தில் நிச்சயம் உள்வாங்கப்பட்டிருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

ஒழுங்குப்பத்திரத்தில் உள்வாங்கியதன் பின்னரே, அதை விவாதத்துக்கு எடுக்கலாமா? அல்லது முடியாதா? என்பது பற்றிப் பேசி தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

'பிரேரணை ஒழுங்குப் பத்திரத்தில் இன்னும் உள்வாங்கப்படவே இல்லை. அதற்கு முன்னதாக எப்படி இதில் சட்டப் பிரச்சினை பற்றி பேச முடியும்' என்றும் அநுரகுமார வினவினார்.

இதன்போது குறுக்கிட்ட சபாநாயகர் கரு ஜயசூரிய, சட்டப் பிரச்சினை இருந்தமையினால் அதை செய்யவில்லை என்று தெரிவித்ததுடன், இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் இன்று வியாழக்கிழமை தமது தீர்மானம் அறியத்தரப்படும் என்றும் இதுவே இந்த விடயத்தில் தனது முடிவு என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார். (இ-7)

# அப்பாற்பட்ட விடயமாகும்- கம்மன்பில

அமைச்சர்ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையானது, திறைசேரி பிணைமுறி விவகாரம் சம்பந்தப்பட்டதொன்றல்ல என்பதும் அதற்கு அப்பாற்பட்ட விடயமொன்று என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி எம்.பி.யான உதய கம்மன்பில, சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

அமைச்சர்ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணை தொடர்பிலான, வாதப் பிரதிவாதம், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீதிமன்ற விசாரணையில் இருக்கும் விடயமொன்று பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது என்பதைப் போன்றே விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் விசாரணையில் இருக்கும் விடயமொன்று தொடர்பிலும் நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாது.

எனினும், வெளிவிவகார அமைச்சர் கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையானது திறைசேரி பிணைமுறி விவகாரம் சம்பந்தப்பட்டதொன்றல்ல என்பதும் அதற்கு அப்பாற்பட்ட விடயமொன்று என்பதும் தீர்மானம் எடுக்கப்படும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### முதல் அடியின் முக்கியத்துவம்!

ஒரு மாபெரும் பயணத்தின் ஆரம்பம் என்பது மிகச் சாதாரணமாக முதல் அடியை First Step எடுத்து வைப்பதுதான்.

அப்படி முதல் அடியை எடுத்து வைத்துவிட்டால் அப்புறம் எஸ்கலேட்டரில் (நகரும் படிக்கட்டு) பயணம் செய்வது போலத்தான்.

"உங்களை வந்து பார்க்கலாம்னு நினைச்சேன். ஆனா உங்க அட்ரஸே சரியாகத் தெரியலை என்று சிலர் சொல்வதைக் கேட்கிறோம்.

விலாசம் இல்லாமல் ஒருவரை எப்படிப் பார்ப்பது என்கிற நினைப்பு நமக்கு ஏற்பட ஆரம்பித்ததுமே,அது மலைப்பாக மாறி விடுகிறது. இந்த மலைப்பு வந்ததுமே அப்புறமே சோம்பலும்தயக்கமும்கைகோர்த்துக் கொண்டு நம்மை நகரவிடாமல் வழி மறிக்க ஆரம்பித்துவிடுகின்றன.

அந்த விலாசத்தைக் கண்டுபிடிக்க நாம் ஒரு சிறு முயற்சியை ஆரம்பித்தாலே போதும்.

உதாரணமாக, அவரது பழைய விலாசத்தில் விசாரித்தல்; அவருக்கும் நமக்கும் தெரிந்த நண்பர்களிடத்தில் அவரைப் பற்றி விசாரித்தல் என்று மெல்லத் தொடங்கினால் போதும்.

நாம் விசாரித்தோம் என்பது அந்த நண்பருக்கு எப்படியோ தெரியவந்து, அந்த நண்பர் தாமாகவே நம்மைத் தேடிவந்தால் கூட வியப்படைவதற்கில்லை.

ஒரு கடிதம் எழுதுவதன் முதல் அடி தபால் நிலையம் சென்று கடிதம் வாங்குவதுதான். கைவசம் கவர் இல்லை என்று சொல்லிக் கொண்டே இருந்தால் எப்படி?

ஒரு திருமணத்தின் முதல் கட்டம் (பலர் விடயத்தில்) ஜாதகத்தைப் புரட்டி வியாழ நோக்கம் வந்துவிட்டதா? என்று பார்ப்பதுதான்.

ஒரு பிரச்சினை முடிச்சு அவிழ்க்கப்பட வேண்டுமானால் முதற்கட்டமாக அவற்றின் இரு முனைகளும் கண்டுபிடிக்கப்பட்டாக வேண்டும். இதுதான் முதற்படி.

நாம் மலைக்கக் கூடிய எந்த விடயமும் முயற்சி வெடிகளால் பொடியாகும். மெல்லவும், சிறுகச் சிறுகவும் முன்னேறினால் போதும்.

முதல் அடியைச் சொந்த முயற்சியின் மூலம் வைக்க வேண்டும். அடுத்தடுத்த அடிகளைச் சுவாரசியமும் வெற்றிக் களிப்பும் எடுத்து வைக்கத் தூண்டும்.

வற்றாத கங்கை நதிகூட எடுத்த எடுப்பில் ஒரு சாதாரணச் சிற்றோடையாகத்தான் ஆரம்பிக்கிறது.

எனவே முதல் அடியை யாரும் சாதாரணமாகக் கருதிவிட வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைக்காட்சி உலகில் மக்களை ஈர்த்த பிக்போஸ்




## ஆர்த்தி அதிரடி



BiggBoss நிகழ்ச்சி மூலம் ரசிகர்களை அதிகம் ஈர்த்தவர் ஓவியா. இவர் தற்போது நிகழ்ச்சியில் இருந்து வெளியேறி தனக்கு பிடித்தது போல் வாழ்ந்து வருகிறார்.

இந்த நிலையில் BiggBoss நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வெளியேறிய ஆர்த்தியிடம் ஒரு ரசிகர், பரணி பற்றி மற்றவர்கள் தவறாக கூறினால் நீங்கள் எப்படி நம்பலாம், அங்கு ஓவியா மற்றும் பரணி தான் நல்லவர்கள் என்றார்.

இதற்கு ஆர்த்தி, ஓவியாவும் பரணி பற்றி புகார் அளித்துள்ளார். எனக்கு பரணி மீது எந்த ஒரு பிரச்சினையும் இல்லை என டுவிட் செய்துள்ளார்.

## இரண்டுபட்டது வீடு

40 நாட்களுக்கு மேல் பரபரப்பாக சென்று கொண்டிருந்த பிக்போஸ் நிகழ்ச்சி ஓவியா வெளியேறியபிறகு விறுவிறுப்பு முற்றிலும் குறைந்துவிட்டது. பலருக்கும் இதில் பல முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வருகிறது. இந்நிலையில் இப்போது நிகழ்ச்சியில் பிக்போஸ் வீடே இரண்டாக பிரிந்துவிட்டது. இரண்டு அணிகளாக பிரிந்து டாஸ்க் செய்ய வேண்டும், மேலும் தனித்தனியாக சமைத்து சாப்பிட வேண்டும் எனவும் பிக்போஸ் உத்தரவிட்டார்.

துணிதுவைக்கும் டாஸ்க் கொடுக்கப்பட்ட நிலையில், இதே போல இன்னும் சில தினங்களுக்கும் பிக்போஸ் வீடு இரண்டாக தான் இருக்கும் எனக்கூறப்பட்டுள்ளது.

## ஓவியாவுக்கு திருமணம்



பிக்போஸ் வீட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை சுயவிருப்பத்தின் பேரில் ஓவியா வெளியேறி விட்டார். தற்போது வீட்டில் இருக்கும் ஓவியாவை சினிமா பிரபலங்கள் உள்ளிட்ட பலரும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறி வருகின்றனர்.

ஆரவுடான காதல் தோல்வி விரக்தியில் இருக்கும் ஓவியாவுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று அவரது உறவினர்கள் முடிவு செய்துள்ளனர்.

இந்த நேரத்தில் ஓவியாவுக்கு ஆறுதலாக இருக்க ஒரு ஆண் துணை தேவை. இதனை உணர்ந்தே அவரது உறவினர்கள் திருமண ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். அவருக்காக மாப்பிள்ளையை தேடும் படலத்தை ஆரம்பித்து விட்டனர். இது தெரிந்தும் ஓவியாவை திருமணம் செய்து கொள்ள பல தொழிலதிபர்கள், பணக்கார வீட்டு இளைஞர்கள் அவரது வீட்டை நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

மேலும், முன்பை விட சினிமா வாய்ப்புகள் குவிந்து வருகிறது. எனவே இன்னும் 3 மாதத்தில் இந்த திருமணத்தை நடித்தி முடித்து விட உறவினர்கள் முடிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

வெளியில் ஓவியாவுக்கு இருக்கும் புகழ் தெரிந்தால் ஆரவே துரத்தி துரத்தி காதல் செய்யவும் வாய்ப்பு உள்ளதாக ரசிகர்கள் கூறி வருகின்றனர்.

## மீண்டும் ஓவியா

பிரபலமாக ஒளிபரப்பான BiggBoss நிகழ்ச்சியில் அனைவராலும் விரும்பப்பட்டவர் ஓவியா. இவர் அந்த நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியது ரசிகர்களுக்கு வருத்தத்தை அளித்துள்ளது. அதன் பிறகு நிகழ்ச்சியில் நன்றாக இல்லை என்றே கூறலாம்.

ஆனால் தற்போது என்ன தகவல் என்றால் மீண்டும் ஓவியா மற்றும் பரணி Wild Card மூலம் நிகழ்ச்சியில் பங்குபெற இருப்பதாக செய்திகள் வருகின்றன.

நிகழ்ச்சியில் மீண்டும் பங்குபெறுவது எல்லாமே ஓவியா கையில் தான் இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## கவலை

பிரபல தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் BiggBoss நிகழ்ச் சிக்கு தான் இப்போது ரசிகர்கள் அதிகம்.

ஆனால் ஓவியா நிகழ்ச்சியில் இருந்து வெளியேறியது முதல் ரசிகர்கள் கொஞ்சம் வருத்தமாக இருப்பதாக தெரிகிறது. இந்த நிலையில், புதிய டாஸ்கில், BiggBoss வீட்டில் இருப்பவர்களுக்கு புதிய பணி கொடுக்கப்பட்டுள்ளது.

எல்லோரும் தனது வேலையை செய்து வரும் நிலையில் வையாபுரி BiggBoss சிடம் தனக்கு இங்கு பிடிக்கவில்லை, ஒவ்வொரு நேரமும் அனைவரையும் சமாளிக்க இருக்கிறது என மனம் நொந்து பேசியுள்ளார்.

## ஜூலியின் நிலை



BiggBoss நிகழ்ச்சியில் பலராலும் வெறுக்கப்பட்ட ஒரு நபர் ஜூலி. முதலில் அவர் செய்த தவறு அடுத்தடுத்து அவர் தொடர்ந்து செய்ததால் பலருக்கு அவரை பிடிக்கவில்லை. இறுதியாக அவர் வெளியேறும்போது கூட கமல் ஹாசன் என் தங்கையை வெளியே அனுப்புகிறேன் பார்த்துக் கொள்ளுங்கள் என்று கூறியிருந்தார். இந்த நிலையில் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறிய ஜூலி எப்படி இருக்கிறார் என்று அவரது தம்பி ஜோஷ்வா கூறியுள்ளார். அவர், சனிக்கிழமையே வீட்டிற்கு வந்துவிட்டார்.

அவர் BiggBoss நிகழ்ச்சி முழுவதையும் பார்த்து மிகவும் வேதனைப் பட்டார். தற்போது ஓய்வில் இருக்கிறார், இரண்டு மாதம் ஓய்வு எடுத்து விட்டு அவரது வேலையை தொடர்ந்து செய்வார்.

ஆனால் அவர் கண்டிப்பாக சினிமாவுக்கு நடிக்க போக மாட்டார் என்றார்.

பிக்போஸ் தொடர்ந்து 10 சீசன்களாக வட இந்தியாவில் நடந்து வருகின்றது. தற்போது இதை சல்மான் கான் நடத்தி வருகின்றார். இதில் ஒரு சீசனில் பிக்போஸ் சொல்வதை ஒரு போட்டியாளர் கேட்கவில்லை, சல்மான் கானும் எவ்வளவோ எடுத்து கூறினார். அவர் கேட்கவில்லை என்றதும் சல்மான் மிக கோபமாக அவரை வீட்டை விட்டு வெளியே போ என்று துரத்தினார், இந்த நிகழ்வு பெரும் பரபரப்பை உண்டாக்கியது. இதுபோல் தமிழில் நடக்குமா? என்றால் கேள்விக்குறி தான், ஏனெனில் கமல் மிகவும் பொறுமையாகவே நிகழ்ச்சியை நடத்தி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸாருக்கு பயனளிக்கக்கூடிய வகையில்

# குற்றவியல் நீதி விசாரணை

# பல்கலைக்கழகம் வேண்டும்

# பிரதமர் ரணில் யோசனை

(கொழும்பு)

பொலிஸாருக்கு பயனளிக்கக்கூடிய வகையில் இலங்கையில் குற்றவியல் நீதி விசாரணை தொடர்பான விசேட பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை முன்வைத்துள்ளார்.



கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார்.

முப்படையினரைப் போன்று அல்லது பொலிஸ் துறையினருக்கு ஆய்வு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடையாது எனவும் பல்கலைக் கழக மொன்று இன்மையே இதற்கான காரணம் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டமா அதிபர் திணைக்களம், சட்டத்தரணிகள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்டவர்களும் இந்தப் பல்கலைக்கழகத்திற்குள் உள்வாங்கப்பட முடியும் என அவர் தெரிவித்தார். (இ)

## தெய்வீகச் சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர்கந்தசுவாமிஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 14 ஆம் நாளான இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் விருந்தினராக விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய ஆசிரியர் தி.கிருஸ்ணமூர்த்திக் குருக்கள் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மடத்துவெளி முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, சர்வசக்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட சகாயபுரம் கருணை வைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை, நடனம், பேச்சு, நவாலி நாகராஜேஸ்வரி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் வில்லிசை, தனிநடனம், மனோன்மணி அம்மன் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு என்பன இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசைப்பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தப் பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு சைவமகா சபை நடத்திவரும் தெய்வீக இசைப் பேருரையில் (கதாப்பிரசங்கம்) இன்றைய நிகழ்வுகள் மாலை 6.30 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய முண்டபத்தில் இடம்பெறும்.

கம்பராமாயணம் பற்றிய இசைப்பேருரையில் இன்று ''பரசுராமன்'' எனும் தலைப்பில் நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா கதாப்பிரசங்கம் நிகழ்த்துவார். (இ-3)

## 'எது பகுத்தறிவு' ஆன்மீக அருளுரை

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு யாழ். சின்மயாமிஷன் நடத்தும் ஆன்மீக அருளுரையில் (ஞான யக்ஞம்) இன்று வியாழக்கிழமை இரவு 7.15 மணி முதல் 8 மணிவரை இல. 700, பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள சின்மயா மிஷனில் "எது பகுத்தறிவு" எனும் தலைப்பில் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

## வடக்கு ஆளுநருக்கு விருது



இலங்கை தனியார் கல்வி நிறுவன சம்மேளத்தினரால் ஆசிரியர் சேவையில் சிறந்த ஆசிரியருக்கான விருது வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேக்கு வழங்கப்பட்டுள்ளது. கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் குறித்த விருது வழங்கப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவன சம்மேளனம் அகில இலங்கை ரீதியில் நடத்திய கருத்துக் கணிப்பில் மொத்தம் 12 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுள் ஆளுநர் றெஜினோல்ட் கூரேக்கு முதலாம் நிலை வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் ஆளுநர் றெஜினோல்ட் கூரேக்கான விருதினை வழங்கி கௌரவித்தார். இந்நிகழ்வில் சபாநாயகர் கரு ஜெயசூரியவும் கலந்து கொண்டார். (இ-60)

## தெய்வீக இசையரங்கின் 14ம் நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கின் 14 ஆம் நாள் நிகழ்வு இன்று வியாழக் கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறும். இதில் பாட்டு-வி.சிவஞானசேகரம், வயலின்- கா.குகபரன், மிருதங்கம்-வி.ரமணா, கெஞ்சிரா-நா.சிவசுந்தர சர்மா, தபேலா-சதா.வேல்மாறன், முகர்சிங்-சி.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

## தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளில் 'அன்பே சிவம்' சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு உலக சைவத் திருச்சபை நடத்தும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வுகளின் 14 ஆம் நாள் நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 7.45 மணிவரை நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் சைவப் புலவர் சிவஸ்ரீ கதிர் குமாரசாமி சுமுகலிங்க சிவாச்சாரியார் தலைமையில் இடம் பெறும்.

இதில் "அன்பே சிவம்" எனும் தலைப்பில் சைவநெறிச் சன்மார்க்கர் செல்வன் த.மதியனன் சொற்பொழி வாற்றுவார். (இ-3)




## பெருந்தே னமுதம் தருவாய் நீ



கருணைக் கடலே அருள்வாய்நீ
கந்தா முருகா வடிவேலா
தருணம் இதிலுன் தாள்பணிந்தேன்
தையல் உமைபா லகன்நீயே
வருவாய் வருவாய் வந்தேயுன்
அருளே தந்தெமை ஆள்வாயே
பெருமைக் குரிய பெருமானே
பெருந்தேன் அமுதம் தருவாயே

சு.குகதேவன்
தெல்லிப்பழை

## எல்லாம் நீயே நல்லூரா...

தேரோடும் நல்லைப் பெருவீதி வாழ்முருகா
சீருடனே நாம்வாழச் சிறப்புத்தா
யாரோடும் நோகாத நல்லறிவை அள்ளித்தா
ஊருடனே பகைக்காத பண்புகளைச் சொல்லித்தா
கூறுகளாய் ஆக்கியெமைக் குறைத்திடவே பார்க்கின்ற
குறையறிவு கொண்டவரைத் திருத்தித்தா
வேறாகிப் போகாத அறிவினைத் தா வேல்முருகா!
வேறுந்து போகாமல் விழுதுவிட வேண்டும் நாம்.

மாவன்னா

## வரமருளும் வேலவனே!

வேழவன் சோதரனே சூரசங்காரனே
வேண்டும் வரமருளும் வேலவனே
அழகிற்கு அழகான அலங்காரனனே
அப்பனுக்கே உபதேசம் அளித்தவனே

ஈழத்தின் காவலனே கந்தனே
மாலவன் மருகனே ஆறுமுகனே
தமிழர் தம் துயர்தீர்த்திடு தீன தயாபரனே
தரணியில் நல்லருள் நல்கிடு நல்லூரானே

இ.தினேஸ்சன்
கோண்டாவில்.

## ஒளியேற்றி வழிகாட்டிடையா

குறைவில்லா அருள் சுரக்கும் நல்லையம்பதியுறைவோனே- எம்
குறைகள் தீர்த்தெம்மை தளராமல் காத்திடையா!
மறையோதும் அந்தணர்கள் முழங்கும் வேதமந்திர இசைகளினால்
மறைபொருளான செல்வமுத்துக்குமரா! துயில் கொள்ளுதியோ!
நிறைவாக இப்பூதலத்தில் நிம்மதியாய் நாம் வாழ-எம் வாழ்வில்
நிறைந்துள்ள வெம் துயர்களினை விரட்டிடையா!
கறையானுக் கிளையவனே! சக்தியுமைபாலனே!
கைகூப்பித்தொழுகின்றேன்
கறைபடிந்த நம் வாழ்வில் ஒளியேற்றி வழிகாட்டிடையா!

ஸ்ரீநதிரன்
நல்லூர்

## நல்லைக்கந்த சந்தப் "பா"



வள்ளி மங்கையின் வனப்பு நாடியே
வாரி நின்றதோர் லீலை கோடியே
கள்ள நேபல வேடங் காட்டினை
கபட நாடகம் போட்டு வாட்டினை
உள்ளக் காதலி லுவக்கும் பாட்டினை
உலகம் யாவுமே யுணர்த்தி யூட்டினை
அள்ளி யேயறி யாமை யோட்டினை
அல்லல் நீக்குவாய் நல்லைக் கந்தய்யா!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடன் ஆக்கபூர்வமான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள விரும்புகிறது கனடா

இலங்கையுடன் ஆக்கபூர்வமான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள விரும்புவதாக கனடா அறிவித்துள்ளது. வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனாநாயக்க, கனேடிய வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்டியா ப்ரீலாண்டு (Chrystia Free land) டன் சந்திப்பு நடத்தியுள்ளார்.

பிலிப்பைன்ஸின் மணிலா நகரில் தற்போது நடைபெற்று வரும் 24ஆம் ஆசியான் மாநாட்டிற்கு சமாந்திரமாக இந்த சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் பதவி ஏற்றுக் கொண்டதன் பின்னர் முதல் தடவையாக இலங்கையுடன் உயர் மட்ட அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஆக்கபூர்வமான அடிப்படையில் இரு தரப்பு உறவுகளை மேம்படுத்திக் கொள்ள முயற்சி எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரசியல் நடவடிக்கைகள் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இராஜாங்க அமைச்சர் சேனாநாயக்க, கனேடிய அமைச்சருக்கு தெளிவூட்டியுள்ளார். (இ-7)

# கழிப்பறையில் கமரா வைத்தியருக்கு சிக்கல்

அரசாங்க வைத்தியசாலை ஒன்றின் கழிப்பறைக்குள் சி.சி.ரி.வி கமரா பொருத்தியதாக வைத்தியர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியருக்கு எதிராக அநுராதபுரம் தலைமை பொலிஸார், அந்தப் பகுதி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

வைத்தியருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வதற்கு போதுமான காரணங்கள் உள்ளதாக, சட்டமா அதிபருக்கு கிடைத்த தகவல்களுக்கமைய இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள வைத்தியரை எதிர்வரும் 15ஆம் திகதி அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் வைத்தியசாலையின் பெண்கள் கழிப்பறையில் இவ்வாறு சி.சி.ரி.வி கமரா பொருத்தப்பட்டதாக வைத்தியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கிழக்குப் பல்கலை. கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகப் பகுதியில் வேலை செய்யக்கூடிய சூழ்நிலை இன்மை மற்றும் மாணவர்களால் தாக்கப்பட்ட பாதுகாப்பு ஊழியருக்கு நீதி கோரியும், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள், நேற்று முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளனரென, கல்விசாரா ஊழியர் சங்கத்தின் செயலாளர் தங்கவேல் சிறிதரன் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் சங்கத்தின் அவசரக்கூட்டம், நேற்றுக் காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பல்கலைக்கழகத்தின் தற்போதைய சூழ்நிலை ஆராயப்பட்டு, ஊழியர்களின் கருத்துகளுக்கு ஏற்ப இம்முடிவு எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்திலுள்ள பெரும்பான்மை இன மாணவர்கள், 5 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 63 ஆவது நாளாக சத்தியாகிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

# ஒரு தொகை சிற்பிகளுடன் ஒருவர் கைது



திருகோணமலை, கிண்ணியா பகுதியில் வைத்து லொறியொன்றில் ஏற்றிச் செல்லப்பட்ட சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஒரு தொகை சிப்பிகளை, நேற்று முன்தினம் கைப்பற்றியுள்ளதோடு குறித்த லொறியின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளாரென, கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

அனுமதிப்பத்திரமின்றி லொறியில் சிப்பிகள் ஏற்றிச் செல்லப்படுவதாக, பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்படி சிப்பிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்பதுடன், மேற்குறிப்பிட்ட சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளாரென, பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர், பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்பதுடன், திருகோணமலை நீதிமன்றத்தில் சந்தேகநபரை ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை, கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தயாராகும் விக்கிரமபாகு கருணாரட்ன



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றி, புதிய அரசாங்கத்தை ஆட்சியில் அமர்த்திய ஜனவரி 8ஆம் திகதி புரட்சியின் நோக்கத்தை நிறைவேற்றுமாறு வலியுறுத்தி சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக நவசமசமாஜ கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பு - விகாரமஹாதேவி பூங்காவில் இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்படும் என அறிவித்தார்.

ஜனவரி 8 ஆம் திகதி புரட்சிக்கு பங்களிப்பு செய்த தரப்பினர் இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகவும் விக்ரமபாகு தெரிவித்தார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1158

Search for people, places and things   Nagendram   Home

### தனேஸ்




### குகன்




### ஆர்த்தி




### புவிதா




### கேசவன்




### லதா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நம்பிக்கையில்லாப் பிரேரணை

# அரசிலுள்ளவர்கள் முன்னின்று செயற்படுகின்றனர்-மகிந்த எம்.பி

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர் உட்பட அர்சாங்கத்தில் உள்ளவர்கள் முன்னின்று செயற்படுவதாக நாடாளு மன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உரிய முறையில் செயற்படுகின்றது.

இந்த நிலையில், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியை விட ஐக்கிய தேசியக் கட்சியினரும், அரசாங்கத்திலுள்ள ஏனைய தரப்பினரும் முன்னின்று செயற்படுவதாக அவர் கூறியுள்ளார்.

மோசடிகள் இடம்பெறுவதாக குறிப்பிட்டு இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆனால், அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் மோசடிகள் இடம்பெற்றுள்ளன.

எதிர்வரும் காலத்தில் மேலும் பல உண்மைகள் வெளிவரும் என மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)




# அரசின் கௌரவத்தைப் பாதுகாக்க ரவி இராஜினாமா செய்ய வேண்டும்

## பிரதி சபாநாயகர் சுமதிபால வலியுறுத்து

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால வலியுறுத்தியுள்ளார்.



நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். பிரதி சபாநாயகர் என்ற ரீதியில் நான் கருத்தை வெளியிடவில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் என்ற ரீதியில் இதனைக் கூறுகின்றேன்

ரவி கருணாநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் பிரதி சபாநாயகர் என்ற ரீதி யில் எனது நிலைப்பாடு மாறுபட்டதாகும்.

எனினும், ரவி கருணாநாயக்க தொடர்ந்தும் பதவியில் நீடித்தால் அது அரசாங்கத்திற்கு பெரும் சிக்கல்களை உருவாக்கும். எனவே அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென திலங்க சுமதிபால கோரியுள்ளார். (இ-7)

## உடுவே தம்மாலோக தேரர் வெளிநாடு செல்ல அனுமதி

கொழும்பு உலன் மெதினியாராமயவின் விகாராதிபதி உடுவே தம்மாலோக தேரர் வெளிநாடு செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

சட்டவிரோதமான முறையில் யானைக் குட்டியொன்றை விகாரையில் வளர்த்து வந்தார் என தம்மாலோக தேரருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

பௌத்த மதப் பிரசார நடவடிக்கைகளுக்காக வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு தம்மாலோக தேரர், சட்டத்தரணி ஊடாக நீதிமன்றிடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கைக்கு அரச தரப்பு சட்டத்தரணிகள் எதிர்ப்பு எதனையும் வெளியிடவில்லை. இதனைத் தொடர்ந்து தம்மாலோக தேரர் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19ஆம் திகதி வரையில் வெளிநாட்டு பயணம் செய்ய கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரட்ன நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளார்.

இதேவேளை, நீதிமன்றில் விசேட கருத்து ஒன்றை வெளியிட அனுமதிக்குமாறு தம்மாலோக தேரர் முன்வைத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

வழக்கு விசாரணையின் போது மனுதாரர்கள் அல்லது பிரதிவாதிகளின் விசாரணை நிறைவில் அல்லது ஆரம்பத்திலேயே இவ்வாறு விசேட கருத்துக்களை வெளியிட அனுமதிக்க முடியும் எனவும் இடைநடுவில் அனுமதிக்க முடியாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## பிணைமுறி மோசடிக்கான

# முழுப்பொறுப்பையும் ரணிலே ஏற்கவேண்டும்

## ஜே.வி.பியின் பிரதம செயலர் தெரிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் பாரிய பிணைமுறி மோசடியில் சம்பந்தப்பட்டுள்ள ரவி கருணாநாயக்க உடனடியாகப் பதவி விலக வேண்டுமென மக்கள் விடுதலை முன்னணியின் பிரதம செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார். அத்துடன், இந்த மோசடிக்கான முழுப்பொறுப்பையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே ஏற்கவேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ரணில் விக்கிரமசிங்க தனது உயிர்த் தோழனான அர்ஜுன் மகேந்திரனுக்கு பெற்றுக்கொடுத்தார். அதன் மூலமாக இந்தப் பிணைமுறி மோசடிக்கு வழி சமைத்துக் கொடுத்தவரும் அவரேதான்.

அந்த மோசடியில் பிரதான பங்கை வகித்த ரவி கருணாநாயக்கவை ரணில் தொடர்ந்தும் காப்பாற்றி வந்ததாலேயே 2015 பெப்ரவரி 27ஆம் திகதிமுதல் அண்மைக்காலம் வரை இந்தப் பாரிய மோசடி மூடி மறைக்கப்பட்டு வந்தது.

இதுபற்றி நாட்டு மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டபின் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து பாரபட்சமற்ற விசாரணைகளுக்கு இடமளித்தார். அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் ரவி கருணாநாயக்க, அவரது உற்ற தோழன் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அவர்களின் அடிவருடிகளான மத்திய வங்கியின் பல அதிகாரிகள் செய்த மோசடிகள் தெட்டத்தெளிவாக அம்பலமாகின.

இன்றும் ரவியையும், மகேந்திரனையும், அலோசியஸையும் காப்பாற்றவே ரணில் முயற்சித்துக் கொண்டிருக்கிறார். நாட்டின் பிரதமர் என்ற பொறுப்பான பதவியில் இருக்கும் ரணில் இவ்வாறாக பகற்கொள்ளையர்களுக்கு அபயமளித்து வருவது நாட்டுக்கே அவமானம்.

ரவியின் குட்டு சந்தேகத்துக்கு இடமில்லாத வகையில் நிரூபிக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில், அவர் தனக்கு எதுவுமே ஞாபகமில்லை, தனது மனைவியும் மகளும் சொகுசு வீட்டை வாங்கியதும் தனக்குத் தெரியாது என முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயல்வது அமைச்சரான ரவி கருணாநாயக்கவுக்கு அழகல்ல.

அவர் தனது பதவியை உடன் இராஜினாமா செய்ய வேண்டும். அல்லது ஜனாதிபதி அவரது பதவியைப் பறித்து இந்த நாட்டில் மிஞ்சியிருக்கும் நீதி நியாயத்தைக் காப்பாற்ற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத கலாசாரம் இலங்கையில்

## ஜனாதிபதி மைத்திரி பெருமிதம்



(கொழும்பு)

உலகில் எந்தவொரு நாட்டிலும் இல்லாத கலாசாரம் இலங்கையில் காணப்படுகின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கை உயரிய கலாசார விழுமியங்களைக் கொண்ட நாடு என குறிப்பிட்டுள்ள அவர் நல்லொழுக்கமுடைய மற்றும் சமாதானமான நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

கண்டி பெரஹறா நிறைவடைந்தமை குறித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)

## தகாத வார்த்தைப் பிரயோகம்; ஜோன் அமரதுங்கவுக்கு சிக்கல்



(கொழும்பு)

தகாத வார்த்தைகளைப் பயன்படுத்திய விவகாரம் தொடர்பில், தகவலளிக்குமாறு, அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

போபிடிய பகுதியில் குப்பை கொட்டும் விவகாரம் தொடர்பில், ஊடகவியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியை அடுத்து, அமைச்சர் ஜோன் அமரதுங்க தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தியதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் வத்தளை - கெரவலபிடிய - முத்துராஜவலை பகுதியில் கொழும்பில் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, கந்தானையிலுள்ள அமைச்சரின் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதன் பின்னர், ஜோன் அமரதுங்கவிடம் ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பிய போது, அவர் தகாத வார்த்தைகளை பயன்படுத்தினார்.

மேலும், இச் சந்தர்ப்பத்தில், குறித்த ஊடகவியலாளருக்கு மரண அச்சுறுத்தலும் அமைச்சரால் விடுக்கப்பட்டதாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ள மனித உரிமைகள்ஆணைக்குழு, முறைப்பாட்டாளரிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளது.

இதன்படி, அமைச்சரை இன்று 10ஆம் திகதிக்கு முன்னர் வாக்குமூலம் அளிக்க வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## வான்எலவில் குண்டுகள் மீட்பு



திருகோணமலை, வான்எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வான் ஆற்றிலிருந்து M60 ரக மோட்டார் குண்டுகள் 4 மீட்கப்பட்டதாக, வான் எல பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஆற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் மோட்டார் குண்டொன்று சிக்கியுள்ளது.

இது சம்மந்தமாக குறித்த மீனவர், வான்எல பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, குறித்த ஆற்றுப் பகுதியில் பொலிஸார் தேடுதல் நடத்திய போது, மேலும் 3 மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கந்தளாய் நீதவான் நீதிமன்ற அனுமதியை பெற்று, சூரியபுர விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன், இந்த 4 மோட்டார் குண்டுகளையும், செயலிழக்கச் செய்யவுள்ளதாக, வான்எல பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

## பரிசுப்பொருட்களுடன் சென்று மகிந்தவை சந்தித்த விவசாயிகள்



குருநாகல் பிரதேச விவசாய பிரதிநிதிகள் சிலர், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சந்தித்துள்ளனர்.

தங்காலை கால்டன் வீட்டில் நடைபெற்ற சந்திப்பின் போது விவசாயிகள் பரிசுப் பொருட்களுடன் சென்றுள்ளனர்.

விவசாய சங்க பிரதிநிதிகளுடன் அவர்களின் குழந்தைகள் மற்றும் உறவினர்கள் ஆகியோரும் மகிந்தவை சந்திக்க சென்றுள்ளனர்.

பழங்கள், தானிய வகைகள் உட்பட பரிசுப்பொருட்களை எடுத்து கொண்டு முன்னாள் ஜனாதிபதியை சந்திக்க சென்றுள்ளனர்.

அங்கு சென்றவர்களுக்கு மகிந்த சிறப்பானதொரு வரவேற்பை வழங்கியுள்ளார்.

தமக்கு ஏற்பட்டுள்ள நியாயமற்ற நிலைமை தொடர்பில் விவசாய பிரதிநிதிகள் முன்னாள் ஜனாதிபதியிடம் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதன்போது மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மதிய உணவு மேசை அலங்கரிக்கப்பட்டு விவசாய பிரதிநிதிகளுக்கு உணவு வழங்கப்பட்டுள்ளது. (இ-7)

## விவசாய அமைச்சின் தளபாடங்களுக்கு ஆறு மில்லியன் ரூபாய் செலவு

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு



(கொழும்பு)

விவசாய அமைச்சின் தளபாடங்களுக்கு ஆறு மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது. விவசாய அமைச்சின் கட்டடத்திற்கு தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக இவ்வாறு செலவிடப்படுவதாகத் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் குறை நிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது இந்த விடயம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரட்நாயக்க இது குறித்து கேள்வி எழுப்பியிருந்தார். (இ-7)

## வெடிபொருட்களுடன் குடும்பஸ்தர் கைது

கிண்ணியா பிரதேசத்தில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாக வெடிபொருட்களை வைத்திருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் திருகோணமலை பிராந்திய நச்சுத்தன்மையுடைய போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

47 வயதான இக் குடும்பஸ்தரிடமிருந்து 32 அடி 9 அங்குலம் நீளமுடைய டெட்கோட் வயர் 15 ரோல்கள், டெட்டேநெட்டர் 100 துண்டுகள் அடங்கிய 26 பெட்டிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன. தங்களுக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையிலேயே, இந்தச் சுற்றி வளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

## கடற் பாதுகாப்பு குறித்து இலங்கை-சீனா இடையே தீவிர ஆலோசனை!

(கொழும்பு)

சீன கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகளுக்கும் கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல்ரவீந்திர விஜேகுணவர்த்தனவுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

நான்கு நாட்கள்உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு கடந்த 6 திகதி சீனக் கடற்படையின் மருந்துவ கப்பலான 'ஹெபிந்க்பான்க்சு' (Hepingfangzhou) கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலின் சிரேஷ்ட அதிகாரிகள் கடற்படை தளபதியை நேற்று முன்தினம் கடற்படை தலைமையகத்தில் வைத்து சந்தித்துள்ளனர்.

இருதரப்பு பாதுகாப்பு மற்றும் கடற்பாதுகாப்பு ஒத்துழைப்புகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்தச் சந்திப்பில் நினைவுச் சின்னாங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக கடற்படைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

## எப்போதும் ஒன்றாக இருக்க முடியாது இருக்கவும் தேவையில்லை - எஸ்.பி



(கொழும்பு)

பிரதான கட்சிகள் இரண்டும் எப்போதும் ஒன்றிணைந்து இருக்க முடியாது எனவும் அவ்வாறு இருக்க அவசியம் இல்லை எனவும் தேர்தலின் போது வேறுவேறாக போட்டியிட முடியும் எனவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஹகுரான்கெத்த பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வின் போது, ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

எது எவ்வாறு இருப்பினும் மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனவிடம் தனது விருப்பத்தின் பேரில் கட்சியை ஒப்படைத்துவிட்டு தற்போது, வேறுபுறம் இருந்து பகைப்பது தகுதியானதல்ல எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி தனியாட்சி அமைப்பதற்கான சக்தியை கோரி நிற்கையில், இது போன்று செயற்படுவது பொருத்தமில்லை என சுட்டிக்காட்டிய திஸாநாயக்க, செய்ய வேண்டியது கட்சியின் ஒற்றுமையையும் வலிமையையும் மேம்படுத்தும் நடவடிக்கைகளே எனவும் தெரிவித்தார். (இ-7)

## பணம் பறிக்கும் அடாவடிக் குழு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காட்டுக் கந்தோர் வீதியை அண்டிய பகுதியில் இனந் தெரியாத இளைஞர் குழுவின் அடாவடி தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால் அப் பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

மாலை நேரங்களில் இவ் வீதியால் பயணிப்போரிடம் இந்தக் குழு பணம் பறித்து அட்டகாசம் செய்து வருகிறது.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிக்ள் உரிய நடவடிக்கையெடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-10-107)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தவளை இளவரசன்

அது ஒரு மாலை நேரம். இளவரசியின் தோழிகள் அன்றைக்கு யாரும் இல்லை. அரண்மனையின் பின்பக்கம் ஒரு ஒற்றையடிப் பாதை. கையிலிருந்த "தங்க பந்தைத்" தூக்கிப்போட்டு விளையாடியவாறே நடந்துகொண்டிருந்தாள் இளவரசி. அருகிலிருந்த குளம் தாமரைப்பூக்களால் பார்க்க அழகாக இருந்தது. சிறிது நேரம் அந்த அழகைப் பார்த்து இரசித்துக் கொண்டிருந்தாள்.

அந்தக் குளத்தை ஒட்டி ஒரு பாறை இருந்தது. அந்தப் பாறையில் போய் அமர்ந்தாள் இளவரசி. இயற்கை அழகை இரசித்துக் கொண்டிருந்த இளவரசி எழுந்தாள். தன் கையிலிருந்த தங்கப் பந்தை தூக்கிப் போட்டு விளையாட ஆரம்பித்தாள்.

பந்து கீழே விழுந்துவிடாமல் பிடிப்பதும் தலைக்கு மேல் தூக்கிப் போட்டு பிடிப்பதுமாக விளையாடினாள். ஒருமுறை உயரமாகத் தூக்கிப் போட்டு பிடிக்க முடியாமல் பந்து பாறையில் விழுந்து உருண்டு ஓடி குளத்துக்குள் விழுந்தது.

தங்கப் பந்து ஆனதால் குளத்துக்குள் உடனே மூழ்கத் துவங்கியது. ஆழமான குளம் அது.

இளவரசிக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அழத் துவங்கினாள். யாராவது என் தங்கப் பந்தை எடுத்துக் கொடுத்தால் எனக்குச் சொந்தமானதையெல்லாம் கொடுத்து விடுவேன். என் நல்ல ஆடைகள், எனது நகைகள் எல்லாவற்றையும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

யாராவது உதவி செய்யுங்களேன் என்று அழுதுகொண்டே சொன்னாள். அரண்மனையின் அந்தப்புறத்துக்குள் யாரும் வர முடியாது. அரண்மனைக்குப் போய் வேலை ஆட்களிடம் சொல்லி, தண்ணீருக்குள் மூழ்கித் தேடச் சொல்ல வேண்டும் என நினைத்தாள். அதற்குள் இருட்டி விடுமே என்று நினைத்தபோது இளவரசிக்கு மேலும் அழுகையாக வந்தது.

"இளவரசியே. ஏன் அழுகிறீர்கள்? என்று ஒரு குரல் கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்தாள். எவரையும் காணோம். மீண்டும் அந்தக் குரல் கேட்டது.

குரல் குளத்திலிருந்து வந்தது. அதுவும் தாமரை இலையில் அமர்ந்திருந்த தவளை தான் பேசியது. பார்க்கவே அருவருப்பாக இருந்தது அந்தத் தவளை.

தவளை பேசுவது இளவரசிக்கு வியப்பாக இருந்தது. "சொறித் தவளையான உன்னால் எனக்கு எப்படி உதவ முடியும்?" என்றாள் இளவரசி"முதலில் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் என்னால் முடிந்தால் செய்கிறேன்" என்றது தவளை. "என் தங்கப் பந்து இந்தக் குளத்துக்குள் விழுந்துவிட்டது. அதை உன்னால் எடுத்துத் தரமுடியுமா?" இவ்வளவுதானா? என்னால் முடியுமே என்றது தவளை.

இந்த சொறித்தவளையால் அந்தப் பந்தை எடுத்து வரமுடியாது என்று நினைத்தாள் இளவரசி.

அதனால் முன்பு சொன்னதையே சொன்னாள். "என் தங்கப் பந்தை எடுத்துக் கொடுத்துவிடு. எனக்குச் சொந்தமான அனைத்தையும் உனக்குத் தருகிறேன்" என்றாள் இளவரசி.

"எனக்கு அதெல்லாம் வேண்டாம். நான் கேட்பதைச் செய்வதாகச் சொன்னால் எடுத்துத் தருவேன்" என்றது தவளை.

"சரி. என்ன வேண்டுமானாலும் கேள். நீ எனக்கு உதவினால் நான் உனக்கு உதவுவேன்" என்றாள் இளவரசி.

"நான் கேட்பது இதுதான். நீ என்னை நேசிக்க வேண்டும். நான் உன்னுடன் இருக்கச் சம்மதிக்க வேண்டும். நீ சாப்பிடும் தங்கத் தட்டில் நானும் சாப்பிட அனுமதிக்க வேண்டும். உன்னுடைய படுக்கையில் நான் படுத்துத் தூங்க அனுமதிக்க வேண்டும்.

இதையெல்லாம் நீ செய்ய ஒத்துக்கொண்டால் நான் உன் பந்தை எடுத்துத் தருவேன் என்றது தவளை.

"என்ன திமிர் இந்தச் சொறித் தவளைக்கு! குளத்தை விட்டு வெளியே வரமுடியாத தவளையின் பேராசையைப் பார்! முதலில் பந்தை எடுத்துத் தருகிறதா பார்ப்போம். இந்தத் தவளை கேட்கும் வாக்குறுதியை தருவதாகச் சொன்னால் போச்சு" என்று மனதில் இளவரசி நினைத்தாள்.



"நீ மட்டும் என் பந்தை எடுத்துக் கொடுத்துவிடு நீ கேட்டதையெல்லாம் நான் செய்வேன்" என்றாள் இளவரசி.

"வாக்குத் தவறக்கூடாது இளவரசியாரே, சொன்னபடி நடக்க வேண்டும் சரியா?" என்றது தவளை.

"வாக்குத் தவறமாட்டேன். சொன்னபடி நடந்துகொள்வேன், நீ என் பந்தை முதலில் எடுத்து வா" என்றாள் இளவரசி.

தவளை தண்ணீருக்குள் "தொப்" என்ற சத்தம் கிளம்ப உள்ளே போனது. குளத்தின் அடி ஆழம் சென்று தேடி தங்கப் பந்தைக் கண்டுபிடித்தது. அதை மேலே எடுத்து வந்து குளக்கரையில் போட்டது தவளை. அவ்வளவுதான், ஓடிப் போய் இளவரசி பந்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து கிளம்பினாள்.

தவளையைப் பற்றிய கவலை இல்லாமல் அரண்மனையை நோக்கிப் போனாள். அவள் ஒரு நன்றிகூட சொல்லாமல் போவதைப் பார்த்த தவளைக்கு மிகவும் வருத்தமாகிவிட்டது.

"இளவரசியாரே, நில்லுங்கள். நீங்கள் சொன்னபடி நடந்துகொள்ள வேண்டும்.

என்னை உங்களோடு எடுத்துச் செல்லுங்கள். நில்லுங்கள், இளவரசி..." என்று தவளை கத்தியது.

ஆனால், இளவரசி எதுவும் காதில் விழாதது போல வேகமாக நடந்து போய்விட்டாள். அன்று இரவு.. இளவரசி, அரசர், அரசியாரோடு உணவு உண்ணும் நேரம். கேட்டது.

(தொடரும்)



## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

08.2017 10

- 610 - முகம்மது நபி குர்ஆனைப் பெற்ற நாள். இது இஸ்லாமில், "லைலத்துல் கத்ர்" அல்லது ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவு எனப்படுகிறது.
- 955 - புனித ரோமப் பேரரசன் முதலாம் ஒட்டோ மகியார்களைத் தோற்கடித்து 50 ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வந்தார்.
- 1519 - மகலனின் ஐந்து கப்பல்கள் உலகைச் சுற்றிவர செவில் நகரில் இருந்து புறப்பட்டன.
- 1675 - ரோயல் கிறீனிச் வானாய்வகத்துக்கான அடிக்கல் லண்டனில் நட்டப்பட்டது.
- 1680-நியூ மெக்சிகோவில் ஸ்பானிய குடியேறிகளுக்கெதிராக புவெப்லோக்களின் எழுச்சி ஆரம்பமானது.
- 1741 - குளச்சல் போர்: திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மர் டச்சுக் கிழக்கிந்தியக் கம்பனியுடனான போரில் டச்சுத் தளபதி இயுஸ்ட்டாச்சியஸ் டி லனோய் என்பவனைச் சிறைப்பிடித்தார்.
- 1776-அமெரிக்காவின் விடுதலைப் பிரகடன செய்தி லண்டனைப் போய்ச் சேர்ந்தது.
- 1792-பிரெஞ்சுப் புரட்சி: பாரிசில் தீவிரவாதிகள் ரிலெரீஸ் அரண்மனையை முற்றுகையிட்டு பதினாறாம் லூயி மன்னனைக் கைது செய்தனர்.
- 1809-குவிட்டோ (தற்போதய ஈக்குவாடோரின் தலைநகர்) பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1948-ஜவஹர்லால் நேரு இந்திய அணுசக்திப் பேரவையைத் (Atomic Energy Commission) துவக்கி வைத்தார்.
- 2000 - உலக மக்கள் தொகை 6 பில்லியனைத் தாண்டியது (www.ibiblio.org தரவின் படி).
- 2003 - யூரி மலென்சென்கோ விண்வெளியில் திருமணம் புரிந்த முதலாவது மனிதர்.
- 2006 - திருகோணமலையில் சேருவிலப் பகுதியில் தொடர்ச்சியான குண்டுவீச்சினால் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பிறப்புகள்

- 1860 - விஷ்ணு நாராயண் பாத்கண்டே, இந்துஸ்தானி இசைக்கலைஞர் (இ. 1936)
- 1894-வி. வி. கிரி, இந்தியாசின் 4வது குடியரசுத் தலைவர் (இ. 1980)
- 1916-சாவி, தமிழக எழுத்தாளர், ஊடகவியலாளர் (இ. 2001)
- 1926-கண்பத்ராவ் தேஷ்முக், இந்திய அரசியல் வாதி
- 1927-வைணு பாப்பு, 1982) இந்திய வானியலாளர் (இ. 1982)
- 1930-க.துரைரத்தினம்,இலங்கைத் தமிழ் அரசியல் வாதி (இ. 1995)
- 1963-பூலான் தேவி, இந்திய அரசியல்வாதி (இ. 2001)

இறப்புகள்

- 1790-பிலிப்பு தெ மெல்லோ, இலங்கைத் தமிழறிஞர் (பி. 1723)
- 2002 - யூகின் ஓடம், அமெரிக்க உயிரியலாளர், சூழலியலாளர் (பி. 1913)
- 2011 - பி. சி. அலெக்சாண்டர், இந்திய அரசியல்வாதி (பி. 1921)

சிறப்பு நாள்

- எக்குவாடோர் - விடுதலை நாள் (1809)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | மருதனார் மடம் ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 250 | 300 | 400 |
| தக்காளி | 160 | 180 | 120 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 60 | 80 |
| கோவா | 140 | 160 | 70 | 120 | 120 |
| கரட் | 120 | 300 | 200 | 180 | 200 |
| பூசணி | 50 | 100 | 50 | 100 | 80 |
| புடோல் | 100 | 100 | 50 | 80 | 80 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 90 | 80 |
| சின்ன வெங்காயம் | 140 | 120 | 150 | 160 | 160 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 90 | 100 | 120 |
| பாகற்காய் | 240 | 300 | 170 | 140 | 160 |
| வெண்டிக்காய் | 60 | 120 | 70 | 100 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 50 | 120 | 160 |
| பயற்றங்காய் | 100 | 100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 130 | 70 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 35 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 150 | 150 | 140 |
| முருங்கைக்காய் | 40 | 40 | 30 | 70 | 40 |
| போஞ்சி | 100 | 200 | 100 | 120 | 200 |
| கத்தரித்தம்புள்ள | 80 | 100 | 50 | 80 | 80 |
| கீரை -1பிடி | 30 | 20 | 20 | 25 | 40 |
| தேசிக்காய் | 60 | 30 | 50 | 20 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 60 | 50-70 |
| இராசவள்ளி | 250 | 300 | — | — | 300 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 150 | 150 | 200 |
| முள்ளங்கி | 60 | 120 | 30 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 10 | 25 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 50 | 80 | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேடுவரும் முன்னே மதிகெட்டு வரும்.
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சம்பந்தரின் ஆலோசனையை தமிழரசுக் கட்சி புறந்தள்ளுகிறது

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுடன் இணைந்து செல்வது தான் நல்லது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் முடிவு.

அவரின் முடிவு அவரின் அரசியல் அனுபவத்தையும் பட்டறிவையும் எடுத்துக் காட்டுகிறது.

எனினும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் நிதானமான முடிவுகளுக்கு தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா எதிர்ப்புத் தெரிவிப்பதாகப் பேசப்படுகிறது.

தமிழரசுக் கட்சியில் இருக்கக்கூடிய ஒரு சிலர் முதலமைச்சரை எதிர்ப்பதில் உறுதியாக இருக்கின்றனர்.

அவரின் பதவியை விலக்கிவிட வேண்டும் என்பதில் அவர்கள் இன்னமும் தளர்ந்தாரில்லை.

அண்மையில் வடக்கின் முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததன் மூலம் தமிழரசுக் கட்சி ட்டபாடு அனைவரும் அறிந்ததே.

தமிழ் மக்கள் ஒன்றுதிரண்டு முதலமைச்சருக்கு தமது ஆதரவைத் தெரிவித்த போது, தமிழரசுக் கட்சி நடுங்கிப் போயுற்று. மிகப் பெரிய பாதகத்தை கட்சி செய்துவிட்டது என்ற விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில் தமிழரசுக் கட்சித் தலைமை மதத் தலைவர்களைச்சந்தித்து சமரசம் செய்யுமாறு கேட்டனர். அதன்படி சமயத் தலைவர்கள் சமரச முயற்சியில் ஈடுபட்டதன் விளைவாக தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருந்த ஆபத்து தணிந்தது.

அதேவேளை தனக்கு இருக்கக்கூடிய மக்கள் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு புதிய அரசியல் தலைமையை உருவாக்கக் கூடிய மிகச் சிறந்த சந்தர்ப்பம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு ஏற்பட்ட போதிலும் அவர் அவ்வாறான ஒரு முடிவுக்கு போகாமல்,

தமிழ் அரசியல் தலைமைகளின் ஒற்றுமை அவசியம் என பெருந்தன்மையோடு நடந்து கொண்டார்.

ஆனால் தமக்கு ஏற்பட்ட கஷ்டமான சூழ்நிலை தீர்ந்ததும் மீண்டும் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி செயற்படுவதென்பது முதலமைச்சரையும் தமிழ் மக்களையும் ஏமாற்றுகின்ற செயல் என்றே கூறவேண்டும்.

இங்குதான் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் ஒரு நடுநிலைத்தன்மையுடன் செயற்பட முற்பட்டுள்ளார்.

அதாவது முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுடன் ஒன்றுபட்டுச் செயற்படுவது அவசியம் என்பதுடன் வடக்கு மாகாண சபையைக் குழப்புகின்ற வேலையில் தமிழரசுக் கட்சி ஈடுபடக்கூடாது எனவும் முதலமைச்சருடனான சமரசத்தின் போது முதலமைச்சருக்கு தான் எழுதிய கடிதத்தின் உத்தரவாதங்களை – உறுதிமொழிகளை காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவும் இரா.சம்பந்தர் நினைக்கிறார்.

ஆனால் முதலமைச்சரின் விடயத்தில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரையும் எதிர்ப்பதற்கு தமிழரசுக் கட்சித் தலைமை துணிந்து விட்டது.

இதுகாறும் எதுவும் பேசாமல் இருந்த தமிழரசுக் கட்சித் தலைமை இப்போது இரா.சம்பந்தர் அவர்களையே எதிர்க்குமளவுக்கு வந்துள்ளதெனில், பின்னணி பலமாக இருக்கிறது என்பது மட்டும் உறுதியாகிறது.

எதுவாயினும் இரா.சம்பந்தரின் ஆலோசனையை தமிழரசுக் கட்சி கேட்குமாக இருந்தால் மாரகத்தில் இருந்து அக்கட்சி தப்பமுடியும் அவ்வளவுதான்.

# இன, மத நல்லிணக்கத்துக்கு இலங்கை முன்மாதிரியாகும்

## துருக்கி முன்னாள் பிரதமர் தாவுத் ஜனாதிபதி மைத்திரிக்கு பாராட்டு

(கொழும்பு)

நாட்டில் இன மற்றும் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தி ஏனைய நாடுகளுக்கு முன்மாதிரியாக திகழும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தை துருக்கியின் முன்னாள் பிரதமர் அஹ்மட் தாவுத்ஒக்லு பாராட்டியுள்ளார்.

"இன மற்றும் சமய கெடுபிடிகளின் காரணமாக பல நாடுகள் பயங்கரவாதத்துடன் போராடிக்கொண்டிருக்கும் நிலையில், ஆசியாவில் மலேசியாவும் இலங்கையும் சிறந்த நிலையில் உள்ளன" என்று அவர் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நேற்று (நேற்று முன்தினம்) நான் கண்டியில் கண்கவர் தலதா பெரஹரவை கண்டுகளித்தேன். இன்று (நேற்று) காலை கொழும்பில் இந்து ஆடிவேல்திருவிழாவை பார்வையிடும் சந்தர்ப்பம் கிடைத்தது. இலங்கையில் இத்தகைய இன நல்லிணக்கத்தை கண்டு தான் பெரிதும் மகிழ்ச்சியடைந்ததாக தாவுத்ஒக்லு தெரிவித்தார். நாட்டில் ஜனநாயகத்தை பலப்படுத்தி வருவதற்காகவும் வெற்றிகரமான வெளிநாட்டு கொள்கையை கடைபபிடித்து வருவதற் காகவும் அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைபாராட்டினார்.

சர்வதேச மன்றங்களில் இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காக ஜனாதிபதி துருக்கிக்கு நன்றி தெரிவித்தார். முதலீடு, வர்த்தகம், விவசாயம், சுற்றுலா மற்றும் விமானசேவை ஆகிய துறைகளில் இருதரப்பு கூட்டுறவை மேலும் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் சுற்றுலா துறைக்கு நல்ல வாய்ப்புகள் உள்ள நிலையில், உலகில் 6ஆவது மிகப்பெரும் சுற்றுலா தளமாக விளங்கும் துருக்கி இத்துறையில் இலங்கையுடன் ஒத்துழைக்க முடியும் என்று துருக்கியின் முன்னாள் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கை இப்பிராந்தியத்தில் ஒரு விமானசேவை மையமாக திகழ முடியும் எனத் தெரிவித்த தாவுத் ஒக்லு, ஆசியா மற்றும் ஐரோப்பாவின் நுழைவாயிலில் ஒரு பாரிய விமான மையமாக திகழும் துருக்கியுடன் நேரடி தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளும் உலகில் முக்கிய கடல் மார்க்கங்களில அமைந்துள்ளன எனக குறிப்பிட்ட அவர், இந்த அமைவிடத்திலிருந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ள முடியும்என்றும்தெரிவித்தார்.

பாக்கீர் மாக்கார் நினைவுப் பேருரையை நிகழ்த்துவதற்காக இலங்கைக்கு வருகை தந்தமைக்காக முன்னாள் துருக்கி பிரதமருக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார். "காலஞ்சென்ற முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்கார் மிகவும் மதிக்கப்படும் ஒரு சிறந்த தலைவர்" என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (செ-11)

## தேர்தல் எப்போது என்று பலரும் நச்சரிக்கின்றனர்

### மகிந்த தேசப்பிரிய ஆதங்கம்

நான் எனது கிராமத்தில் மரண வீட்டுக்கு சென்றுதிரும்புவது அதிகாலையில்தான் என தெரிவித்த தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய, அரச அதிகாரிகள் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க தைரியம் வேண்டும். இல்லையேல் முன்னேக்கி செல்ல முடியாது எனவும் குறிப்பிட்டார்.

அவர்மேலும்கூறுகையில்,

பிறரிடம் ஏச்சு வாங்கும் போது பொறுமையாக செவிமடுக்க வேண்டும். நான் மாகாண சபைத் தேர்தல் நடத்தவில்லை என எவ்வளவோ ஏச்சு வாங்க வேண்டியுள்ளது.

மரண வீட்டில் கூட எனது நண்பர்கள், தெரிந்தவர்கள் ஏன் தேர்தல் நடத்தவில்லை என கேட்கிறார்கள்.ஆகவேதான் நான் அதிகாலையில் மரண வீட்டுக்கு செல்கின்றேன்.

என்னுடைய சேவைக் காலத்தில் 27 வருட காலம் பிரதேச செயலாளராக இருந்தேன். மக்களிடம் எனக்கு வரவேற்பு இருந்தது.

நான் தேர்தல் ஆணையாளராக வந்த பின் அரசியல்வாதிகளுடனே எனது தொழில் தொடர்கிறது.

இந்தநிலையில் எனக்கு எப்படி வரவேற்பு கிடைக்கும். அது மட்டுமல்ல தேர்தல் பிற்போடப்படுவதற்குமதுதிணைக்களம் மட்டும் காரணமல்ல.

2013 சட்டமூலத்திலும் குறைபாடுஉள்ளது. அதனை நிவர்த்தி செய்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றினால் அடுத்த ஒக்டோபர் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியும் எனவும் ஆணைக்குழுத் தலைவர் கூறியுள்ளார். (செ)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**சஷ்டாகம் என்றால் என்ன?**

பெண் இராசியில் இருந்து ஆண் இராசி 6,8 வந்தால் சஷ்டாக தோஷம் என்பர் இவ்வமைப்பு கொண்டவர்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் போராட்டங்களையே சந்திப்பர்.

சுப சஷ்டாகம்

பெண் இராசி- ஆண் இராசி

மேஷம் - கன்னி, தனுசு - ரிஷபம், துலாம் - மீனம், கும்பம் - கடகம், சிம்மம் - மகரம், மிதுனம் - விருச்சிகம்

இவ்வமைப்பு கொண்டவர்களுக்கு சஷ்டாக தோஷம் இல்லை. (தொடரும்)

## சத்திய தரிசனம்



### முயற்சியைத் தீவிரமாக்குங்கள்

❖ தொடக்கத்தில் கறையான் சிறிதாகவே தோன்றும். சிறுகச்சிறுக பெருகி, நாளடைவில் மரக்கட்டை முழுவதும் செல்லரித்துப் போகும். அதுபோல, தீய சிந்தனைகள் சிறிதாகவே தொடங்கும். ஆனால், முடிவில் ஒருவனை முற்றிலும் அழித்துவிடும்.

❖ உணவு உடனே ஜீரணமாக வேண்டும். அதுபோல ஒவ்வொரு நாளும் கேட்கின்ற நல்லசிந்தனைகளை அன்றைக்கே நடைமுறைப்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் அச்சிந்தனையைக் கேட்டதில் பயனில்லை.

❖ சேற்றுநிலத்தை மெதுவாகப் பாயும் நீரோட்டத்தால் சரிசெய்ய முடியாது. வேகமாகவும், முழுமையாகவும், மூலை முடுக்கெல்லாம் அடித்துச் செல்லும் வெள்ளம் போல தண்ணீர் பாயவேண்டும். அதுபோல, ஆன்மீகத்தில் சாதனை செய்ய நினைத்தால் அரைமனதுடன் இறங்கக் கூடாது. இது ஆபத்தானது.

❖ கிணற்றுக்கோ, ஏரிக்கோ அல்லது பரந்த சமுத்திரத்திற்கோ கூட நீர் எடுத்துவரச் சென்றாலும், நம் கையில் இருக்கும் பாத்திரத்தின் அளவுக்குத் தான் தண்ணீரை எடுக்க முடியும். அதுபோல, நம் செய்யும் செயலில் நம் முயற்சிக்கு தகுந்தவாறே பலன் கிடைக்கும். எனவே முயற்சியை தீவிரமாக்குங்கள்.




## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

அவன் சேஷாத்ரி மலைக்கு அருகிலுள்ள நாராயணபுரம் என்னும் பட்டணத்தை தலைநகராகக் கொண்டு தலைமையேற்று ஆட்சி புரிந்து வந்தான்.

அவன் கட்டிக் கொண்டு வந்த மனைவி முதல் முறையாகக் கருவுற்றாள்.

அண்டத்தில் அலைந்து கொண்டிருந்த சோழ மன்னனின் ஆவி அந்தக் கருவில் போய்த் தங்கி ஒரு பிண்டமாக வளரத் தொடங்கியது.

பத்துமாதங்கள் கழித்து பகலவனையொத்த ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தையை ஈன்ற பொழுதில் பெரிதுவத்து அதற்கு ஆகாசராஜா என்று பெயரிட்டாள் சுதர்மனின் பட்ட மகிஷி.

அதன்பின் இன்னொரு ஆண் மகவை அந்த அரசி ஈன்றாள். அக்குழந்தைக்கு தொண்டைமான் என்று பெயர் சூட்டினாள். (தொடரும்)

## ஆரோக்கியமான உணவு ஆரோக்கியமான சமுதாயம்

ஆறு வகையான உணவுக் கூறுகளும் கிடைக்கக் கூடியதாக ஒரு நாளுக்கான உணவைத் திட்டமிடல்

பதப்படுத்திய உணவு வகைகளை தவிர்த்தல்/ குறைத்தல்

அதிக சக்தி நிறைந்த உணவுகளைக் குறைத்தல் (சீனி சேர்ந்த உணவுகள், கேக், பிஸ்கட்ஸ், மென்பானங்கள்)

வீட்டிலே தயாரித்த உணவுகளை உண்ணல்

நாள்தோறும் 2.3 லீற்றர் தண்ணீர் அருந்துதல்

**சமபல உணவுண்ணலை வழக்கப்படுத்திக் கொள்வோம்**

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக்
# தொடரின் 2 ஆவது வெற்றியை
# கிறாஸ் கொப்பர்ஸ் கைப்பற்றியது



வி.ரி. மகாலிங்கம் பிறிமியர் லீக் கிரிக்கெட் தொடருக்கான 2 ஆவது போட்டி 05.08.2017 அன்று யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது.

இதில் கிறாஸ் கொப் பர்ஸ் அணி, றெயின்போ அணியை 10 இலக்குகளால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போ அணி 18.3 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 87 ஓட்டங்களைப் பெற்றது.

சௌமிதரன்- 34, கிருஷ்யன்- 16, செந்தூரன்- 15 ஓட்டங்களைப் பெற்றனர். மதுூஸன்-01, கபில்- 02, அஜித்-01, சரண்ராஜ்-03, ரசிகரன்-01, சுஜீவன்- 02 இலக்குகளைப் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி இலக்குகள் எதுவும் இழக்காமல் 88 ஓட்ட ங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் முகம் யாழ். சென்றல் விளை யாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசை பட்டியலுக்கு (Rating) கிறாஸ் கொப்பஸ் அணி 4.88 புள்ளிகளையும் றெயின்போ அணி 0.87 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

# சம்பியனானது கரவெட்டி ஞானம்ஸ்





நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் அழைக்கப்பட்ட 10 வடமராட்சி கழகங்களுக்கிடையே நடத்திய அணிக்கு 9 பேர் 8 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட சுற்றுப்போட்டியில் முதலாவது சுற்றில் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தையும் இரண்டாவது சுற்றில் அரசடி ஸ்பேர்ஸ் அணியையும் வெற்றி கொண்டு Play-off [illegible]றுக்கு தகுதி பெற்று Qualifier 1 இல் மாலுசந்தி மைக்கல் அணியை வெற்றி கொண்டு இறுதிப் போட்டியில் பருத்தித்துறை வீனஸ் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்துடன் 8000 ரூபாய் பணப்பரிசிலையும் வென்றது கரவெட்டி ஞானம்ஸ். (க)

## அரையிறுதிக்கு முன்னேறியது அரசடி ஸ்பேஸ் வி.கழகம்



கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 5 ஓவர்கள் கொண்ட போட்டித் தொடரில் ஆனைக் கோட்டை யூனியன், பொற்பதி.tata boys ஆகிய விளையாட்டு கழகங்களை வீழ்த்தி அரையிறுதிக்குச் சென்றுள்ளது அரசடி ஸ்பேஸ் விளையாட்டுக்கழகம். (க)

## 40 வயதுக்கு மேற்பட்டவருக்கான உதைபந்து சமநிலை தவிர்ப்பு உதைமூலம் புனித சூசையப்பர் வி.க வெற்றி



மன்னார் கால்பந்தாட்ட முதுநிலை சங்கத்தினால் வருடா வருடம் நடத்தப்படும் 40 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியானது இரண்டு நாட்கள் மன்னார் பொது விளையாட்டரங்கில் நடைபெற்றதுடன் அப் போட்டியில் ஆறு கழகங்கள் கலந்துகொண்டிருந்தன.

கடந்த 7 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் பனங்கட்டு கொட்டு புனித. சூசையப்பர் விளையாட்டுக் கழகமும் சின்னக்[illegible]ட கிரீன் பீல்ட் விளையாட்டுக் கழகமும் மோதி யாரும் எவ்வித கோல்களும் போடாத நிலையில் சமநிலைத் தவிர்ப்பு உதைமுறை மூலம் பனங்கட்டு கொட்டு புனித சூசையப்பர் விளை யாட்டுக் கழகம் வெற் றியீட்டி யது.

குறித்த இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனும் விருந்தினராக வடமாகாண சபை உறுப் பினர் ரிப்கான் பதியுதீனும் கலந்து கொண்டு பெறுமதி யான பரிசில்களை வழங்கி வைத்தனர். (க)

## அரச அதிபர் வெற்றிக்கிண்ண கிரிக்கெட் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியன்



அரச அதிபர் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டி 07.08. 2017 அன்று GPS மைதானத்தில் இடம் பெற்றது. இறுதிப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாவகச்சேரி பிரதேச செயலக அணி 15 ஓவர்களில் 5 விக் கெட்டுக்கள் இழப்பிற்கு 93 ஓட்டங்களை பெற்றது.

94 என்ற வெற்றி இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 10ஓவர்களில் 2 விக் கெட்டுக்கள் இழந்து ஓட்ட இலக்கை அடைந்து இவ் வருட துடுப்பாட்ட சம்பியனாகியமை குறிப்பிடத்தக்கது. (க)



இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனத்தால் இலங்கை பாடசாலைகளின் 16 வயது பெண்கள் உதைபந்தாட்ட அணிகளுக்கிடையே தேசியமட்டத்தில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் யா/ மகாஜனக் கல்லூரி அணி மூன்றாமிடத்தை பெற்றுக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தை...

மகிந்த ராஜபக்ஷவால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில்,

மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்காக அரசாங்கம் அரசியலமைப்புச் சட்டத்தின் 20-வது திருத்தச் சட்டத்தை வர்த்தமானியில் வெளியிட்டுள்ளது.

கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களின் பதவிக்காலம் ஒக்டோபர் மாதம் ஆரம்பத்தில் முடிவடைய உள்ளதுடன் இந்த மாகாண சபைகள் கலைக்கப்படும்.

உத்தேச 20ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டால், அடுத்த வருடம் பதவிக்காலம் முடிவடையும் சகல மாகாண சபைகளின் பதவிக்காலமும் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரை நீடிக்கப்படும்.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடத்தப்பட வேண்டிய உள்ளூராட்சி சபைத் தேர்தல் திகதி அறிவிக்காமல் ஒத்திவைக்கப்பட்டிருக்கும் பின்னணியில் அரசாங்கம் தற்போது மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி வெளிநாட்டு சக்திகளின் உதவியுடன் சூழ்ச்சியாக ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் ஜனநாயக விரோத செயல்களில் புதிய செயல் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைக்க கொண்டு வரப்படும் 20ஆவது திருத்தச் சட்டமாகும்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதியில் இருந்து ஜனநாயகம் தலைகீழாக மாற ஆரம்பித்தது.

144 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதமரை பதவியில் இருந்து நீக்கி விட்டு 44 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பிரதமராக நியமிக்கப்பட்டார்.

ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உட்பட பல அரசியல் கட்சிகளின் வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் பதவிக்கு வந்ததும் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகியவற்றின் தலைமைத்துவத்தை தனது கட்டுக்குள் கொண்டு வந்தார்.

இதனையடுத்து ஜனாதிபதி செயலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்துண்டின் மூலம் பிரதம நீதியரசர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வாக்குறுதியாக நிறைவேற்று அதிகாரம் ஒழிக்கப்படும் என கூறியிருந்தனர்.

இதற்காக கொண்டு வந்த 19-வது திருத்தச் சட்டம் ஒரு ஏமாற்று நடவடிக்கை. நிறைவேற்று அதிகாரம் முன்பு இருந்ததை விட மிகவும் பலமிக்கதாக மாறியுள்ளது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த தனது அறிக்கையில் கூறியுள்ளார். (செ-11)

# ரவிக்கு எதிரான...

பிக்கையில்லாப் பிரேரணை குறித்து, இன்று வியாழக்கிழமை அறியத்தரப்படும் என்று சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.

மேலும் அந்த பிரேரணையை, விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியுமா அல்லது இல்லையா என்பது தொடர்பான தீர்மானமானது, சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டே, அறியத்தரப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்றம், சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில், நேற்றுமுன்தினம் பிற்பகல் ஒரு மணிக்கு கூடியது. சபையின் பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர் எழுந்த, தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த எம்.பியான விமல் வீரவன்ச, அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் கேள்வியெழுப்பினார். அந்த ஒழுங்கு பிரச்சினைக்கு பதிலளிக்கும் போதே, சபாநாயகர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னதாக ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய, விமல் வீரவன்ச, ஒன்றிணைந்த எதிர்க்கட்சியைச் சேர்ந்த 30இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் கையெழுத்திட்டு வெளிவிவகார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையொன்றை சமர்ப்பித்துள்ளனர்.

இந்நிலையில், அதை விரைந்து விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கின்றது. ஆகையால், அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்னவென்றும் கேட்டார். அந்த ஒழுங்குப் பிரச்சினைக்கு பதிலளித்த சபாநாயகர் ஜயசூரிய, இந்த விடயம், தொடர்பில் சட்டப் பிரச்சினையொன்று முன்வைக்கப்பட்டிருப்பதால் அது பற்றி சட்ட மா அதிபரிடம் ஆலோசனை பெறப்பட்டு, இன்று வியாழக்கிழமை மீண்டும் பேசி தீர்வொன்று காணப்படும் என்றார்.

மீண்டும் குறுக்கிட்ட விமல் வீரவன்ச எம்.பி, நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் அங்கு சட்டப்பிரச்சினை எதுவும் காணப்படவில்லை என்றார். (செ-11)

# ஐ.தே.கவை...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பு ஒன்றிலேயே பதுளை மாவட்ட ஐ.தே.க பாராளுமன்ற உறுப்பினரும், ரெலிக்கொம மற்றும் டிஜிட்டல் அமைச்சருமான ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

நல்லாட்சியின் சுதந்திரம் காரணமாக செயற்பாட்டு ரீதியான அரசியல்வாதிகளுக்கு எதிராக புதிய சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

திருடர்கள் மற்றையவர்களை திருடர்கள் எனக் கூறி வருகின்றனர். திருடர்களுக்கு தண்டனை வழங்காதது எமக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எம்மை போன்ற அரசியல்வாதிகள் உயிரை கொடுத்து இந்த அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்ததும் எமக்கே குழி பறிக்கப்பட்டுள்ளது.

எம்மை அழிக்கும் சூழ்ச்சி ஒன்று நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கு எதிரான நடவடிக்கைகளை நான் இன்று முதல் ஆரம்பித்துள்ளேன்.

அமைச்சர்கள் ரவி கருணாநாயக்க, கபீர் ஹாசீம், மலிக் சமர விக்கிரம, மங்கள சமரவீர என அடுத்தது முக்கியமான அமைச்சர்களுக்கு எதிரான சதித்திட்டங்கள் அடுத்தடுத்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தது போல், உடனடியாக விசாரணைகளை நடத்தி கடந்த காலத்தில் நடந்த ஊழல்களை எம்மால் கண்டறிய முடியாமல் போனது.

இதனால், கடந்த காலத்தில் திருடிய திருடர்கள் தம்மை விடுதலையான திருடர்கள் என எண்ணிக்கொண்டுள்ளனர். இவை எல்லாம் எமது தவறுகள்.

ஜனாதிபதி ஆணைக்குழுவை போல், சட்டமா அதிபர் திணைக்களத்தை சுதந்திரமாக இயங்க செய்யுமாறு வலியுறுத்தும் போராட்டத்தை நான் இன்று முதல் ஆரம்பித்துள்ளேன்.

எனக்கு ஆதரவு வழங்க அமைச்சர்கள் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னுடன் இருக்கின்றனர் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தொடர்ந்தும் தெரிவித்திருந்தார். (செ-11)

# ஜனாதிபதி-பிரதம...

உள்ளாகியிருக்கும் வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பாக, ஜனாதிபதியும் பிரதமரும் முடிவெடுப்பார்கள் என்று ஐ.தே.க பொதுச்செயலரும் அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முடிவுக்காக கட்சி உறுப்பினர்கள் காத்திருக்கின்றனர்.

ரவி கருணாநாயக்கவை அமைச்சரவையில் வைத்திருப்பதா இல்லையா என்பது குறித்து ஜனாதிபதியும், பிரதமரும் கலந்துரையாடி வருகின்றனர்.

ரவி கருணாநாயக்க பதவி விலக வேண்டும் என்று ஐ.தே.க உறுப்பினர்கள் பலரும் கருதுகின்றனர். இறுதி முடிவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அரசாங்கத்தின் பெயரை காப்பாற்றுவதற்காக ரவி கருணாநாயக்க பதவி விலக வேண்டும் என்று பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் பலரும் இதே கருத்தை வலியுறுத்தி வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-11)

# வேலையற்ற...

கையளித்தனர்.

மகஜரைப் பெற்றுக் கொண்ட ஆளுநர் உரிய அமைச்சின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்று தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

அதனைத் தொடர்ந்து யாழ்.கைதடியிலுள்ள வடமாகாண முதலமைச்சரின் அலுவலகத்திற்குச் சென்ற பட்டதாரிகளின் பிரதிநிதிகள் வடமாகாண முதலமைச்சருக்கான மகஜரினை முதலமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எஸ்.இராஜதுரையிடம் நேற்று பிற்பகல் 03.30 மணியளவில் கையளித்துள்ளனர்.

மகஜர்கள் கையளித்த பின்னர் பட்டதாரிகளின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடத்தினை நிரப்புவதற்கான அரச வர்த்தமானி கோரப்பட்டுள்ளது.

எனினும், அந்த வர்த்தமானியில் குறித்த நியமனத்திற்கான வயதெல்லை 35 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், 35 வயதிற்கும் மேற்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் வட மாகாணத்திலுள்ளனர்.

எமது தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தின் கோரிக்கைக்கு அமைவாக கோரப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடத்துக்கான வயதெல்லையை 45 வயதாக அதிகரிக்க வேண்டுமெனவும், பட்ட இறுதித் திகதியை உள்வாங்குதல் வேண்டும் எனவும் கோரி வடமாகாண ஆளுநர், வட மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர்கள் கையளித்துள்ளோம் எனத் தெரிவித்தனர். (செ-11)

# 'ஆவா' குழு;...

வெளிநாட்டில் இருந்து ஆவா குழுவுக்கு நிதியளிக்கும் அல்லது அவர்களை இயக்கும் நபர்கள், குழுக்களைக் கண்டறிவதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகளுடன் சந்தேக நபர்கள் கடந்த காலங்களில் தொடர்பு வைத்திருந்தார்களா என்றும் புலனாய்வு அமைப்புகள் ஆராயவுள்ளன.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான பயங்கரவாத புலனாய்வு பிரிவும் தனியான விசாரணைகளை நடத்தி வருகிறது.

இதுபோன்ற குழுக்கள் நாட்டில் செயற்படுவதற்கு பொலிஸார் இடமளிக்கமாட்டார்கள்.

பயங்கரவாத புலனாய்வு பிரிவினரால் இந்தவாரம் மேற்கொள்ளப்பட்ட கைதுகளை அடுத்து மூன்று வாள்கள், ஒரு கத்தி, ஒரு உந்துருளி மற்றும் ஒரு வெளிநாட்டுத் தயாரிப்பு கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

எனினும் சுடுகலன்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார். (செ-11)

# ஒற்றுமையுடன்...

னர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று மாலை 5.15 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரது அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கட்சி உறுப்பினர்கள் மத்தியில் பேசிய இரா.சம்பந்தர், தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் புதிய அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை கட்சியின் உறுப்பினர்கள் உணர்ந்து செயற்பட வேண்டும், கட்சிக்குள் பிளவுகள் ஏற்படுவது தீர்வுத்திட்டத்தையும் பாதிப்படையச் செய்யும்

ஆகவே கட்சி உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டும். வடக்கு மாகாண சபையில் அமைச்சுப் பொறுப்புக்களை தமிழரசுக் கட்சி ஏற்பது இல்லை என்ற முடிவு மற்றும் அது தொடர்பான குழப்பங்கள் தொடர்பில் மத்திய செயற்குழுவைக் கூட்டி விரைவில் முடிவெடுப்போம், அதிகாரமிக்க அர்த்த முள்ள அரசியல் தீர்வை அதிகாரப்பகிர்வின் ஊடாக நாம் பெற ஒற்றுமையுடன் முயற்சிக்க வேண்டும்.

அரசியல் ரீதியான வேறுபாடுகளைக் களைந்து மக்களுக்காக செயற்பட அனைவரும் ஒன்றிணைந்து இருப்போம் என்ற விடயங்களை வலியுறுத்தி உறுப்பினர்கள் மத்தியில் இரா.சம்பந்தர் உரையாற்றியிருந்தார்

மேற்படி சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், திருமதி சாந்தி சிறீஸ்கந்தராசா, சிறிநேசன், சிறீதரன் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள் சார்பில் தர்மலிங்கம், கமலேஸ்வரன், அஸ்மின், சத்தியமூர்த்தி, ஆர்னோல்ட், சயந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (செ)

# மணல் கடத்தி வந்த 3 ஹன்டர்கள் மீட்பு

(கரணவாய்)

சட்டவிரோத மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்டு வந்த மூன்று ஹன்டர் வாகனங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்த வேளை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துன்னாலைப் பகுதியில் விஷேட அதிரடிப்படையினரும் பொலிஸாரும் இணைந்து தொடர் சுற்றிவளைப்பில் ஈடுபட்டிருந்த நிலையில் நெல்லியடிப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ஹன்டர் வாகனங்களை நேற்று புதன்கிழமை மாலை மீட்டதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு தினங்களிற்கு முன்னரும் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று ஹன்டர்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-60.104)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள துருக்கியின் முன்னாள் பிரதமர், பேராசிரியர் அஹமட் டவுலொக்லு நேற்று கொழும்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமைத்துவத்தின் கீழ் இலங்கையின் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு, இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் வலுப்பெற்றுள்ளதாக துருக்கியின் முன்னாள் பிரதமர், பேராசிரியர் அஹமட் டவுலொக்லு இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அதனால் இலங்கை எடுத்துக்காட்டான தேசமாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

துருக்கி அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்கு வழங்கும் ஒத்துழைப்புக்களுக்கு இதன்போது ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளை நூலகம்



## மின்னல் தாக்கி இள...

மின்னல் தாக்கத்தின் காரணமாக இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். உயிரிழந்த இளம் தாயின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சிலாபம் பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயாரான திலினி மதுசன் (வயது -25) என்ற பெண்ணே உயிரிழந்தவராவார்.

மன்னார் மடுத்திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் மடுத்திருத்தலத்திற்கு வருகை தந்துள்ளனர்.

இந்த நிலையிலே மடு திருத்தல பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை ஏற்பட்ட வானிலை மாற்றத்துடனான மின்னல் தாக்கத்தின் காரணமாக இரண்டு பிள்ளைகளின் தாயாரான பிரஸ்தாப பெண் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4)

## கணவனுக்காக கஞ்...

சாயப் பெண் ஒருவர் கணவனுக்காக கஞ்சா வளர்ப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய பொலிஸார் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போதே குறித்த பெண்ணை கஞ்சா செடியோடு கைது செய்துள்ளனர்.

குறித்த பெண் வீட்டின் பின் புறத்திலுள்ள நீரோடைக்கருகில் கஞ்சா செடியை வளர்த்து வந்துள்ளார். அக் கஞ்சா செடியானது 7 அடி உயரமுடையது என பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவர் கஞ்சா சுருட்டுக்கு அடிமையானவர் என்றும் இரண்டு தடவைகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சா ஒரு கிலோ கிராம் நிறையுடையது என்றும் அது காய்ந்த பின்னர் அதன் நிறை சுமார் 250 கிராம் இருக்கும் எனவும் குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட பெண் இரண்டு பிள்ளைகளின் தாய் எனவும் அவரை அநுராதபுர நீதிமன்றில் ஆஜர்படுத்தியதன் பின்னர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

குற்றத்தை ஒப்புக் கொண்ட நிலையில் குறித்த வழக்கு எதிர் வரும் 17ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-11)

## பல மோசடி இரகசி...

நேற்றைய தினம் காலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

அரசியல் களத்தில் சூடுபிடித்திருக்கும் அமைச்சர் ரவி கருணாநாயக்க விவகாரம் குறித்து இன்று நாடாளுமன்றத்தில் தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ள நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சர் ரவி கருணாநாயக்க கலந்துகொள்ளவில்லை.

இந்நிலையில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர இது தொடர்பாக கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

மிகவிரைவாக அமைச்சர் ரவி கருணாநாயக்க தொடர்பான சர்ச்சைக்கு தீர்வு காணப்படும். அத்துடன் மத்திய வங்கி மோசடி தொடர்பாகவே விசாரணை நடத்தப்படுகின்ற நிலையில் கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல்கள் குறித்தும் வெளிவர ஆரம்பித்திருக்கின்றன. முன்னாள் ஆளுநர் அஜித் கப்ராலின் சகோதரியின் விடயமும் அம்பலமாக ஆரம்பித்துள்ளது.

எனவே கடந்த ஆட்சியிலும், இந்த ஆட்சியிலும் இடம் பெற்ற மோசடி தொடர்பான விடயங்களும் வெளிவரும். இந்த ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமித்த போது பிரச்சினை களை மூடிமறைக்க வும், இதனால் எந்த பிரயோஜனமும் இரு க்காது என்றே சில அரசியல்வாதிகள் கூறினர்.

இன்று அப்படியல்ல. மக்களின் வேண்டுகோளுக்கு இணங்க சுத்தமான அரசியலை செய்வதற்காக ஜனாதிபதி நடவடிக்கையை மேற்கொண்டார். எனவே பல இரகசியங்கள் விரைவில் வெளிவரும். இது நாட்டிற்கே நன்மையான விடயம் என்றார் அமைச்சர் மகிந்த அமரவீர. (செ-11)

## மங்கள இன்று யாழ்...

யும் அமைச்சர், காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு சென்று நேரடியாக கள நிலைவரங்களை பார்வையிடவுள்ளார் எனவும் தகவல் கிடைத்துள்ளன. (செ)

## சந்தேகத்தின் பேரில்...

ரணை மற்றும் சந்தேகத்தின் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து பெற்ற மேலதிக தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் அதிகாலை சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட 23, 24 வயதுடைய மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ் பொலிஸ் நிலையத்தில் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் மேலும் மானிப்பாய், கொக்குவில் பகுதியை சேர்ந்த இரு இளைஞர்கள் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பாக அண்மைக்காலமாக இதுவரை 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (செ-9)

## சுமந்தி...

சுமந்திரனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சந்தேகநபர்கள் ஐந்து பேரையும் எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர்கள் ஐவரையும் நேற்றைய தினம் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எம்.ஏ.சுமந்திரனை கொலை செய்ய சதித்திட்டம் தீட்டியமை, சட்ட விரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


அறிவுபூர்வமான முதலீடு - வளமான எதிர்காலம்
யாழ் - முதலீட்டாளர் கருத்துக்களம்
Aug.26 (Saturday) @ 9.30am
@Tilko City Hotel
முன்பதிவு : Call & SMS to 0777822014
(C-9287)
CSE COLOMBO STOCK EXCHANGE

எவரெஸ்ட் குமாரிக்கா சந்தனாதி தைலம்



- நீண்ட கூந்தல் வளர்ச்சிக்கும்
- இளநரையை போக்கவும்
- பொடுகிலிருந்து நிவாரணம் பெறவும்
- கண் எரிச்சல், தலை வலியை நீக்கவும்
- ஞாபக சக்தியை அதிகரிக்கச் செய்யவும்
- ஏழு வகையான மூலிகைகள் உள் அடங்கிய சிறப்பு தைலம்

100 வீதம் இயற்கையானது

(கற்றாழை, வல்லாரை, நெல்லிக்காய், கரிசலாங் கண்ணி, கறிவேப்பிலை, பொன்னாங்காணி, அவுரி மற்றும் விற்றமின் E)

(9447)

எல்லா மருந்தகங்களிலும் சாதாரண கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

தயாரிப்பு: எவரெஸ்ட் மருந்தகம், உசன், மிருசுவில், யாழ்ப்பாணம்.

ஏக விநியோகஸ்தர் பிரமநாதன் & Co எண்.28, 26, பேரின்பநாயகம் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

கைபேசி எண்: 0776389356, 0777153571


## மரண அறிவித்தல்



பிறப்பு: 12.11.1985 - இறப்பு: 09.08.2017

### செல்வன் குணரத்தினம் சுபஜீவன்

(B.Sc Hons.) Quantity Surveyor - J&P (o) Ltd, Doha, Qutar)

சுதுமலை வடக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் குணரத்தினம் சுபஜீவன் நேற்று (09.08.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் (சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் குணரத்தினம் - சரஸ்வதி தம்பதிகளின் கனிஸ்ட புத்திரனும், சுபாஸ்கர் (வட மாகாண விற்பனை முகாமையாளர் - RHINO ROOFING PRODUCT, Ltd), சுபாஜினி (ஆசிரியர்-யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சுபாசங்கர் (கட்டார்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆறுமுகவடிவேல், சரவணமுத்து லீலாவதி, காலஞ்சென்றவர்களான பத்மநாதன், கைலைநாதன் ஆகியோரின் பெறாமகனும், கோவிந்தசாமி, சிவயோகம் சரஸ்வதி, செல்வராசா யோகாம்பிகை, காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், யோகராசா புவனேஸ்வரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.08.2017) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
சந்தையடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (093)
0776873149


சிறுநீரகம் தேவை
(A,O குருதி வகை)
49 வயதுடைய ஒருவருக்கு A,O குருதி வகைகளைச் சேர்ந்த சிறுநீரகம் உடன் தேவை. வழங்குபவருக்கு உயர்ந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு: 0774604627, 0774819738

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9273)



கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப CANADA - 400/= மட்டுமே (நிபந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

வணிகக்கல்வி
A/L 2018
ஆசிரியர்
திரு. V.K ரவீகரன்
வணிகமுகாமைத்துவம்
ஆரம்பம்:- 12.08.2017 சனிக்கிழமை காலை 8.30 மணி
இடம்:- 366/8, 1ஆம் ஒழுங்கை, இருபாலை வீதி, கோண்டாவில். (094)
தொடர்புகளுக்கு:- 077 723 8597, 077 704 6968

ENGLISH
ஆங்கிலம் பிரத்தியேக வகுப்புக்கள்
அனுபவம் மிக்க ஆசிரியரினால் உங்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்பு: 0776589443
யாழ்ப்பாணம் (082)

கணிதம் 6,7 & 8
ஆங்கில, தமிழ் மொழிமூலம்
GROUP CLASS
By: P.T.Kumaran
UNIVERSAL
0775442160 Kantharmadam

தையல் தொழிலுக்கு ஆட்கள் தேவை
இடம் : சிவானந்தா கட்டடம், சின்னராசா தையலகம், செல்வச் சந்நிதி ஆலய வீதி, உடுப்பிட்டி.
25.08.2017 அன்று 9 - 12 மணி வரையான காலப்பகுதியில் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஆள் தெரிவிற்கான நேர்காணல் இடம்பெறும். மேலதிக தகவல்களுக்கும் மற்றும் உங்களுடைய வருகையை உறுதிப்படுத்தவும் 0771461277 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். (C-9289)

வேலைவாய்ப்பு
யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது KINGS ELECTRONICS(PVT) LTD நிறுவனத்திற்கு
- Heavy Vehiles Driver
- Showroom Sales Representative(ஆண், பெண்)
- Showroom sale manager

பணியாளர்கள் உடன் தேவை 16.08.2017ம் திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமூகமளிக்கவும்.
தொடர்புகளுக்கு
KINGS ELECTRONICS(PVT) LTD
021-4546699
12, Point Petro Road, Jaffna. (வேம்படிச் சந்திக்கு அருகாமையில்)
(C-9294)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.08.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.